595

# ஜகன்மோகினி

மலர் 21
இதழ் 11
தாரண ஐப்பசி
November 1944



...யிடு வர்ஷருது மலரின் மேலட்டைப்படம்

...மு.கோதைநாயகி அம்மாள்.

JL
ππ211, N22314
N44·21·1.
183095

...MOHINI," SINGAPERUMAL...




★

# உதய சூரியன்

★

**வை.மு.கோ**

எழுதிய

பண்டித
பாமர
ரஞ்சகமான
அரிய நூல்.

●

உள்ளக் கிளர்ச்சி
உண்டாக்கும்
ரஸமான
கதைப்போக்கு

○

தமிழின் இனிமையை
நிரூபிக்கும் எளிய
கம்பீர நடை

●

எழுத்தோவியத்தை
அழகுப் படுத்தும்
சித்திர அலங்காரங்கள்.

★

"...கடமையை நிறைவேற்றுவது முதல் பணியா? காதலியைத் தேடி அடைவது முதல் பணியா? என் இதயத்தில் ஒலித்துக்கொண்டிருப்பது இந்த ஒரே பிரச்னைதான்!"—பாஸ்கரன். —(உதயசூரியன் பக்கம் 85)

...யின் பரீட்சை விபரீதமாகவன்றோ இருக்கிறது! படித்துப் பாருங்கள்.

# ஜகன்மோகினி

தனிப்பிரதி அணா 4.
வருட சந்தா ரூ. 3.
22-வது ஆண்டுமலர் ரூ. 2.


ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. -திருவள்ளுவர்
ஜகன்மோகினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. -வீரராகவ கவி


Vol. 21. No. 11. தாரண ஐப்பசி November 1944.


## அருளும் பொருளும்

கலைவாணியின் திருவருளால் மானிடர் பெறும் விலையிலாப்பொருள் அறிவேயாகும். அறிஞர்கள் தம் தம் முறையில் தமது அறிவை வெளிப்படுத்தி லோகோபகாரமான பல தொண்டுகளைப் புரிந்து பிறவியின் பயனையும், புகழையும் அடைகிறார்கள்; கற்பனாலங்காரமும் சித்திராலங்காரமும், காவியச்சிறப்பும் ஓவியச்சிறப்பும் ஒருங்கே மிளிர சக்தியானுஸாரம் ஹிருதயமலரைச் சமர்ப்பித்துக் கலைராணியை அர்ச்சிக்கின்றனர்.

183095

அருள் நம் கண்ணுக்குப் புலப்படாதது; ஆனால் அதன் அரும் பலன் பிரத்யக்ஷம். ஸரஸ்வதியின் அருள் கருணையால் நிகழ்ந்ததென நாம் கூறுவது அந்த அருளின் பயனால் உருவான காவியப் பூஞ்சோலையினால்தான். "மோகினி" அன்பர்களின் உள்ளங்களில் தனி இடம் பெற்றுள்ள ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரை அருள்கவி என்று கொண்டாடுவதற்கு அம்மையின் அருளால் பூத்த மலர்களை அவளுக்கே அவர் சூட்டுவதே தக்க சான்றாகுமல்லவா?

தமிழ்த்தாயின் திருவருள் பெற்ற யாவரும் தமிழ்த் தொண்டு புரிந்து அன்னைக்குத் தமது உள்ளத்தில் மலரும் தமிழ் மலர்களைச் சூட்டுவதே அரும் பணியாம். தேவியின் அருளைப் பெறுபவர்கள் பாக்கியசாலிகளான அறிஞர்கள்; முறையே, அறிஞர்களின் அறிவுப் பொக்கிஷத்தை உலகோர் உணர்ந்து பயன்பெறச் செய்பவை பத்திரிகைகள். ஆக, அருளால் உருவாகி, யாவருக்கும் பயன்படுவன பத்திரிகைகளே!

கலைமகளின் அருளால் உதிக்கும் பொருள் பத்திரிகை; அது ஸம்ரக்ஷிக்கப்படுவதற்கு அவசியம் வேண்டியது திருமகளின் அருளால் கிடைக்கும் பொருள் என்று கூறத்தேவையில்லை. அறிஞர்களின் ஆதரவு பத்திரிகைகளுக்கு எவ்வளவு அவசியமோ, அதைப்போல் அபிமானிகளின் பேராதரவும் அத்தியாவசியம். இருபாலாரும் எருவும் நீரும் போல் உதவினால் பத்திரிகைப்பயிர் செழித்தோங்குகிறது.

ஒரு பத்திரிகையின் வயதும் செல்வாக்கும் அதற்குக் கிடைத்துள்ள ஞானஸம்பத்தையும், தன ஆதரவையும் காட்டுகின்றன. இருவித அருள்களும் கிடைப்பதற்கு மிகவும் முக்கியமான ஒரு பெரிய பொருள் தே[illegible] அதுதான் கருணாசாகரனும், கிருபாநிதியுமாகிய அப்பரம்பொரு[illegible]

# மோகினி அன்பர்களுக்கு விசேஷ அறிவிப்பு

## கிருபையும் கட்டளையும்

கிருபாநிதியான கிதாசாரியனின் திருவருளால், நாளது ஜனவரி மாதத்தில் உங்கள் மோகினி தனது 22-வது ஆண்டு ஆரம்பத்தை மிகக் குதூகலத்துடன் கொண்டாடுகிறாள். மோகினியின்பால் பேரறிஞர்களின் பேராதரவும், தமிழன்பர்களின்பேரபிமானமும் தினே தினே அமோகமாகப்பெருகி வருவதால், இவ்வருடமும் வழக்கம்போல் தமிழ் மலர்மாலையைச் சூட்டி, தமிழ்த்தாயை வணங்கும் பாக்கியத்தைக் கிருபை செய்தருளியிருக்கிறார் ஸ்ரீ பாடலாத்ரி நரஸிம்மன். இந்த யுத்தகாலத்தில் பரந்தாமனின் கிருபை பத்திரிகாலயங்களைச் சர்க்கார் உத்திரவு மூலம் அல்லவா எட்டுகிறது! இந்திய சர்க்கார் பிரத்யேக சலுகை காட்டி, கிருபைகூர்ந்து, மோகினி 22-வது ஆண்டு மலர் வெளியிட அநுமதித்திருக்கிறார்கள். உலக நியதிப்படி எதற்கும் ஒரு கட்டு-திட்டம் உண்டல்லவா? அதுவும் இந்த யுத்தகாலப் பேப்பர்பஞ்ச நிலையை முன்னிட்டு சில நிபந்தனைகளை விதித்தே உத்திரவளித்திருக்கிறார்கள்.

## ஏக்கமும் ஊக்கமும்

"கடவுள் கிருபை எப்படி இருக்குமோ? கவர்ன்மெண்ட் கட்டளை எப்படி பிறக்குமோ?" என்றெல்லாம் ஏங்கிக்கொண்டிருந்த மோகினி சேவகர்களுக்கு இப்போது ஊக்கமும் உத்ஸாகமும் பிறந்துவிட்டன. "விஷய மேன்மை பொருந்திய மலர்" என்று தமிழ் ரஸிகர்கள் களிக்கும் முறையில் மலரை அமைக்கப் பெரும் முயற்சி எடுத்துக்கொள்ளப்படுகிறது. விதிக்கப்பட்டுள்ள அளவு—திட்டத்திற்குள் எத்தனை அறிஞர்களுக்கும் அம்சங்களுக்கும் இடங்கொடுக்க முடியுமோ அத்தனையும் அளிக்கப்படும். சென்ற மலரைவிடச் சிறப்பாக அமைப்பதே எமது நோக்கம்.

## தியாகமும் யோகமும்

"நல்ல யோகம் வருது! நல்லகாலம் பிறக்குது!" என்று குடுகுடுப்பைக்காரன் சொல்வதுபோல், "ஒரு சின்ன தியாகம் செய்தால், கூடிய சீக்கிரத்திலேயே நல்ல யோகம் பிறக்கும்" என்று நாமும் சொல்லவேண்டியிருக்கிறது; இது, முதலில் குறிப்பிட்டுள்ள கட்டளையின் பலனாகவே. ஜனவரியில், மலரில் விசேஷ தமிழ் விருந்து கிடைக்கப்போகிறது உங்களுக்கு என்பதற்காக, தற்போது மோகினியில் கொஞ்சம் பக்கங்கள் குறைவு என்பதைப் பொருட்படுத்தாது, இச் சிறு தியாகத்தைப் புரிந்து, …ப்பு வரும் நல்ல யோகத்தை எதிர்பார்ப்பீர்களென்றே நம்பு

## மலரும் மணமும்

அரிய தமிழ் மலர்களைத் தொடுத்துத் தயாரிக்கும் கதம்ப மாலை, வஸந்தச் சோலையின் நறுமணங்கமழ உங்கள் உள்ளங் களையும் மலரச் செய்யுமென்றே எதிர்பார்க்கிறோம். ஏற்கெனவே உங்கள் அபிமானத்திற்குப் பாத்திரமாயுள்ள பல பிரபலஸ் தர்கள் புது மணம் கமழும் புத்தப் புதிய எழுத்து மலர்களையும் சித்திரச்சிறப்புகளையும் அள்ளிவீசி உங்களைப்பரவசப்படுத்துவர்.

## குணமும் பணமும்

குற்றங்குறைகளை நீக்கி, குணத்தைக் கொள்ளும்படிக் கோருவது கடமையல்லவா? தமிழ் மணமும் உயர்கலா குணமும் விஷய மேன்மையும் அமைந்தால் எவ்வளவு பணம் செலவழிந்தாலும் பொருட்படுத்தமாட்டோம்; நீங்களும், "குணமும் பணமும் ஈடாகுமா? இவ்வளவுதானா தகும் இந்த கிடைத்தற்கரிய விசேஷ விருந்து?" என்று கூறத் தயங்கமாட்டீர்கள். பல கட்டு திட்டங்களுக்கு உட்பட்டு மிகவும் திட்டமாகவே வெளியிட வேண்டி யிருப்பதால் அடக்க விலை ரொம்பவும் அதிகமாகிறது. தவிர, விளம்பரங்கள் மிகவும் சொற்பமே ஏற்றுக்கொள்ளப் படும். இதையெல்லாம் உத்தேசித்து மலரின் விலை ரூ. 2/-என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. (தபாற்செலவு அணா 4) முன்பணம் அனுப்பிப் பதிவுசெய்துகொள்பவர்களுக்கு தபாற்செலவு இனாம்.

## உடனே முந்துங்கள்

தேவைக்குத் தகுந்தபடி பிரதிகள் இல்லையாகையால் பல அன்பர்களுக்குப் பிரதி கிடைக்காது என்பது முன் கூட்டியே தெரிந்த விஷயம். தாமதிக்காது உடனே பணமனுப்பிப் பதிவு செய்துகொள்பவர்களுக்கே கட்டாயம் பிரதிகள் கிடைக்கும். சந்தாதாரர்கள் புது வருடத்திய சந்தாவுக்கும், மலருக்குமாகச் சேர்த்து ரூ. 5/-அனுப்பவேண்டும். ஏஜண்டுகள் மூலம் மோகினி வாங்குவோர் தமது ஊர் ஏஜண்டிடம் மலருக்கு ரூ. 2/-செலுத்திப் பதிவுசெய்து கொள்ளலாம். நேரில் நம்மிடமும் பதிவுசெய்து கொள்ளாது, தமது ஊர் ஏஜண்டிடமும் பதிவு செய்துகொள் ளாது, "வெளியான பிறகு பார்த்துக் கொள்வோம்" என்றிருப் பவர்களுக்குப் பிரதிகள் கிடைப்பது அசாத்யம். ஆகையால் தங்கள் சௌகரியம்போல், தாமதிக்காது செய்யவும்.

"ஜகன்மோ கினியாள் வருகின்றாள்
செந்தமிழ் இன்பம் தருகின்றாள்
பற்பல புதுப்புது காட்சிகளை
படந்தரும் எழுத்தின் ஆட்சியினால்
கற்பனை உலகையும் காட்டுகிறாள்
கல்வியைக் கதையென ஊட்டுகிறாள்"

22-வது
ஆண்டு மலர்
விலை ரூ. 2.
முன்னதாகவே பதிவு
செய்யவும்.

**பி.ஸ்ரீ**

# தம்பியைத் திருத்திய தமக்கை

பெயருக்கு ஏற்றபடி அறிவுச் செல்வத்தை விசேஷமாக அடைந்து அறியாமையாகிய மருளை நீக்கிக் கொண்டார். "இவ்வளவு சிறந்த அறிவாளியாகத் திகழப்போகிறார்!' என்பதை எப்படித் தெரிந்து கொண்டாரோ பெற்றோர்கள் மருள் நீக்கியார் என்று இவருக்குப் பெயரிட்டிருந்தார்கள். இவருடைய தமக்கையாரான திலகவதியாரும் பெண் குலத்திற்குத் திலகமாகவே திகழ்ந்தார். இருவரும் அறிவுச் செல்வத்தோடு சிவபக்திச் செல்வத்திற்கும் பேர்போனவர்களாய் ஊரும் நாடும் புகழ வாழ்ந்தார்கள்.

இப்படி யிருந்தும் இவர்கள் பின்னளில் ஒருவரோடு ஒருவர் மாறுபட்டு வாழ நேர்ந்தது. தம்பி ஜைனர் ஆகிவிட்டார்; ஜைனமதத் தலைவரே ஆகிவிட்டார். தர்மசேனர் என்று பேரும் புகழும் பெற்றுச் சிவதர்மத்திற்கு விரோதிகளான ஜைன சமய திலகமாக வாழ்ந்தார். தமக்கையோ சிவபக்தியில் முதிர்ந்து சிவப் பழமாய்க் கனிந்திருந்தார். தம்பியின் நிலை நோக்கிப் பரிதவித்தார், பதைபதைத்தார். ஏன் இந்த மாறுபாடு தம்பி தமக்கையருக்கிடையே? ஏன் இந்த மதமாற்றம்? மருள்நீக்கியாருக்கும் மதிமயக்கமா?

*        *        *        *

திலகவதியாரைக்கலிப்பகையார் என்பவருக்கு மணம் பேசி யிருந்தது. குணம்பேசிக் குலம்பேசி, மணம்பேசிய அவ்வளவே தான்; ஆனால் மணம் நடைபெறவில்லை. [illegible]லிப்பகையார் படைத் தலைவர் [illegible] ஒருவர். ஒரு போரில் உயிர்கொடுத்துப் புகழ் சூடிக் கொண்டார். திலகவதியாரோ, மணச்சடங்கு நிறைவேறு விட்டாலும் தம்மை அவருக்கே உரியவரென்று கருதிவிட்டார். தம் உயிரையும் அவர் உயிரோடு இசைவிப்பதாக உடன்கட்டை ஏற முயன்றதும், மருள்நீக்கியார் தமக்கையார் அடிகளில் விழுந்து, "பெற்றோரை இழந்தோம்; நீரும் என்னைவிட்டுப் போவீரென்றால் அதற்கு முன்னமே நான் உயிர்விடுவேன்!" என்று வருந்தினார். திலகவதியாரும் தம்பிக்காக உயிர்தாங்கி, உயிர்களுக்கெல்லாம் அருள்தாங்கிப் பணியாற்றும் தவமாக விதவைக் கோலத்தை மேற்கொண்டு ஒழுகினார்.

அம்பொன்மணி நூல்தாங்கா(து),
 அனைத்துயிர்க்கும் அருள்தாங்கி
இம்பர்மனைத் தவம்புரிந்து
 திலகவதி யார்இருந்தார்.

குடும்பத்திலே பெற்றோரை இழந்ததும், மணம்பேசியமாப்பிள்ளையை இழந்ததும், மருள் நீக்கியாருள்ளத்திலே உலகம் அநித்யம் என்ற கொள்கையை நன்கு பதித்துவிட்டன. இவர் தர்மம் செய்வதிலேயே கண்ணும் கருத்துமானார். அக்காலத்திலே ஜைனமதம் உலகம் அநித்யம் என்ற கொள்கையையும் அஹிம்ஸா தர்மத்தையும் விசேஷமாக வற்புறுத்தியதால், மருள் நீக்கியார் தாம் பிறந்த சைவ சமயத்தைத் துறந்து சமணராகிவிட்டார்.

இந்நாளில் திருப்பாதிரிப்புலியூர் என்று சொல்லப்படும் பாடலி புத்திரத்திலே, தருமசேனர் என்ற பெயரோடு ஜைன சமயப் பெரும்புலவராக விளங்கினார்.

இந்தச் செய்தி, சிவநெறிக்கே இதயமும், சிவனடியார் திருப்பணிக்கே கையுமாயிருந்த திலகவதியாரை விசனக்கடலில் ஆழ்த்திவிட்டது. இவ்வம்மையார் அதிகை வீரட்டானம் என்ற சிவக்ஷேத்திரத் தில்பணிசெய்துகொண்டே தம்பியை நினைத்து நினைத்துக் கண்ணீர் வடித்தார். அந்த க்ஷேத்திரத்தில் கோயில் கொண்டிருக்கும் சிவபரஞ்சுடரைத் தொழுது, "ஸ்வாமி! நீர் அடியேனை ஆண்டருளுவது உண்மையானால் அடியேன் பின் வந்த மருள் நீக்கியையும் அன்னிய சமயத்தினின்றும்காப்பாற்றவேண்டும்" என்று விண்ணப்பம் செய்தார்.

அந்த அம்மையாரின் கனவிலே சிவபெருமான் தோன்றி அப்படியே செய்வதாக அருளினார். பிறகு அப்பெருமான் தர்மசேனருக்குச் சூலை (கொடிய வயிற்றுவலி) நோயுண்டாக்கினார். குடலிலே கனலும் விஷமும் வஜ்ராயுதமும் போய்க் குடைவது போல் அவ்வளவு அவஸ்தை ஏற்பட்டதும் தர்மசேனரால் தாங்க முடியவில்லை. ஜைனர்கள் மருந்து கொடுத்தார்கள்; மந்திரித்துப் பார்த்தார்கள். நோய் மேன்மேலும் அதிகரித்தது. "இதற்கு நம்மால் ஒன்றும் செய்ய முடியாது" என்று கைவிட்டார்கள்.

இவ்வளவு கஷ்டத்திற்கும் இடையே தம்பியாருக்குத் தமக்கையாரின் நினைவு வந்தது. தம்முடைய நிலையை ஒரு ஆள்மூலம் தெரிவித்ததும் அம்மையார் "நான் சமணமடத்திற்கு வரமாட்டேன்" என்று சொல்லியனுப்பினார். "அப்படியானால் நானே போய்த் தமக்கையார் அடிகளில் வணங்குவேன்" என்று தீர்மானித்தார் தர்மசேனர்.

இப்படித் தீர்மானித்தவர் ஜைன வேஷத்தை ஒழித்து இரவில் அதிகை வீரட்டானம் சென்று திலகவதியாரிருந்த மடத்திற்குச் சென்றார். தமக்கையார் காலில் விழுந்தார். இவரது பரிதாப நிலையைக் கண்ட அம்மையார், "இதுவும் சிவபெருமான் அருள்தான்! இப்பெருமானைப் பணிந்து பணிசெய்வாய்!" என்று தேற்றினார். பிறகு 'ஓம் நமசிவாய' என்ற பஞ்சாட்சரத்தை ஜபித்துத் திருநீறு கொடுத்தார் தபோதனியார்.

திருவாளன் திருநீறு
திலகவதி யார்அளிப்பப்,
"பெருவாழ்வு வந்த" தெனப்
பெருந்தகையார் பணிந்தேற்(று) அங்கு
உருவார அணிந்துதமக்(கு)
உற்றஇடத்(து) உய்யும்நெறி
தருவாராய்த் தம் முன்பு
வந்தார் பின் தாம்வந்தார்.

தமக்கையாரளித்த திருநீற்றைத் தமக்குப் பெருவாழ்வு வந்ததென்று பணிந்து பெற்று உடல் நிறையப் பூசிக்கொண்டார். பூசிக்கொண்டு தமக்கையாரைப் பின் தொடர்ந்து கோயிலுக்கு வந்தார். கோயிலை வலங்கொண்டு சிவபெருமானுக்கெதிரே மண்மிசை விழுந்தார். அப்போது எம்பெருமான் திருவருளால் தமிழில் அப்பெருமானுக்குப் பாமாலைகள் சூட்டவேண்டுமென்ற உணர்வு ஏற்பட்டது.

உடனே "கூற்றாயினவாறுவிலக்ககிலீர்" என்றுதொடங்கும் திருப்பதிகம் பாடினார். தமது கொடிய சூலை நோயைப் போக்கி அருளவேண்டுமெனப் பிரார்த்தித்தார். பதிகம் பாடி முடிந்ததும் சூலைநோய் மறைந்துவிட்டது. பெருமான் மருள் நீக்கியாருக்குச் சூலை நோயுடன் பிறவி நோயையும் போக்கி அருளினார்.

மருள் நீக்கியாரின் வாக்குவளம் கண்டு "நாவுக்கரசு என்று உன் பெயர் நிலை பெறும் உலகத்திலே" என்று ஓர் அசரீரி எழுந்தது. அது கேட்ட நாவுக்கரச

"தீவினையேன் அடையும் திருவோ இது?" என்று கருணைக் கடலில் மூழ்கிக் களித்தார்.

* * *



திருநாவுக்கரசர்தான் அப்பர் சுவாமிகள் என்று மிகப் பிரசித்தமான பேருடனும் விளங்குகிறார். தேவாரம் பாடிய மூன்று சைவ சமயாசாரியர்களில் ஒருவர் இவர். இவருடைய தனிப்பெரும் புகழிலே திலகவதியாரின் பேரும் புகழும் மறைந்து விட்டன, எனினும் தம்பியைத்திருத்திய அந்தத் தமக்கையாரொருவர் இல்லையென்றால், பொதுவாகத் தமிழுலகத்திற்கும், சிறப்பாகச் சிவநெறித் தமிழ் என்ற தமிழ் வேதத்திற்கும் எவ்வளவு மகத்தான நஷ்டம் விளைந்திருக்கும்?

திருநாவுக்கரசரின் உளம் உருக்கும் பாடல்களைப்பாடி ஆறுதலும் ஆனந்தமும் பெறுகிறவர்களெல்லாம் இப்பெரியாரின் சரித்திரத்தையும் தெரிந்துகொள்ளவேண்டும். தெரிந்துகொண்டு இவரைத் திருநாவுக்கரசராக்கித் திகழ வைத்த திலகவதியாரின் தியாகத்தையும் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.



# இந்த மாதம்

நரகாசுர வதம்

★

தீபாவளி

★

துலாக் காவேரி.

23 DEC 1944
MADRAS

## கவனிக்கவும்

| வெளியாகும் தேதி | | விலை |
|---|---|---|
| 10—11—44உ. | அமுதமொழி (மலிவு பதிப்பு ரூ. 2.) | 2—8—0 |
| 15—11—44உ | உதய சூரியன் | 1—0—0 |
| 10—12—44உ | நந்தவனம் சரத்ருது மலர் | 1—8—0 |
| 1— 1—45உ | மோகினி 22-வது ஆண்டு மலர் | 2—0— |

# வர்ஷருது மலர்

கிரீஷ்மருது மலரைக் காட்டிலும் இன்னும் ரஸமாயிருப்பதாக அன்பர்கள் கருதுகிறார்கள். இதேபோலத்தான் கிரீஷ்மருது மலர் வெளியானதும் அது வஸந்தருது மலரைவிட அதிக உருப்படிகளுடனும் கவர்ச்சியுடனும் இருப்பதாகக் கருதினர் நமது வாசகர்கள். ஒன்றன்பின் ஒன்றாக ஒன்றைவிட ஒன்று மேலானதாகவே அமைந்து வெளிவரும் இம்மலர்கள் பெண்சக்தியின் சிறப்பைப் பரிமளிக்கச் செய்கின்றன. சிலருக்கு சிறு சிறு உருப்படிகளாக அநேக அம்சங்கள் இருப்பதே பிடிக்கும்; சிலருக்கு விரிவான சில உருப்படிகளே போதும் என்ற மனப்பான்மை. ஷை இரு வகையினரையும் திருப்தி செய்கின்றன நமது ருது மலர்கள். ரூ. 7—8—0 அனுப்புபவர்களுக்கு ஏற்கனவே வெளியாகியுள்ள கிரீஷ்மருது, வர்ஷருது மலர்களும் இனி டிஸம்பர், பிப்ரவரி, ஏப்ரல் மாதங்களில் வெளியாகப் போகும் 3 மலர்களும் ரிஜிஸ்டர் போஸ்டுமூலம் (எமது செலவில்) அனுப்பப்படும். கிரீஷ்மருது மலரும் வர்ஷருது மலரும் மட்டும் ரூ. 3.

## வர்ஷருது மலரில்

நவராத்திரி மகாத்மியம்
நிகரற்ற செல்வம்
கல்தூண் சொல்லிய கதை
போட்டிக்குப் போட்டி
இரத்தபாசம்
வினாவும், விடையும்
அவசரம்! அவசரம்!!
காதல் பிரதிக்ஞை
தலைக்கோட்டை
தெய்வச் செயல்
அனுமான் கண்ட காட்சி
மனச்சாட்சி
ராதையின் தியாகம்
சங்கித ஸாகரம்
தினமும் ஒன்று!

விலை ரூ. 1-8-0

---

# புத்தக விமர்சனம்

## போலந்து—பின்லந்து. (ப. 124. அணா 12.)

தமிழ் நாட்டு மக்கள் அயல்நாட்டுப் பிரச்னைகளில் அக்கரை கொள்ளவேண்டுமென்னும் நோக்கத்துடனே இப்புத்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது. மகாகனம் சாஸ்திரியார் முன்னுரையில் எழுதுகிறார்: "ஒரு மக்களின் குணம் அறிய அதன் பூர்வ சரித்திரம் தெரியவேண்டும். அப்போதே அதன் கஷ்டத்தையும் போக்கையும் மதிப்பிட முடியும். சென்றதும் இருப்பதும் தெரிந்தாலே வரப்போவதை ஒருவாறு ஊகிக்கலாம்." போர்மூண்ட இடம் போலந்து. இப்போது போரிலிருந்து விலகிக் கொண்டுள்ள இடம் பின்லந்து. பலவித கஷ்டங்களுக்குள்ளாகிய இவ்விரு நாடுகளின் சரித்திரத்தையும் நண்பர் த. கிருஷ்ணமூர்த்தி நிறைய விஷயங்களுடன் எளிய முறையில் எழுதியிருக்கிறார்.

## சிறுகதை மஞ்சரி. (ப. 133. ரூ. 1.)

ஏற்கெனவே வெளியாகிய 9 கதைகளைத்தாங்கி வெளிவந்துள்ள இப்புத்தகம், வாசகர்களுக்குத் திரும்பவும் ஒரே சமயத்தில் படிப்பதற்கு ரஸமாயிருக்குமென்று நம்புகிறோம். பெரும்பாலும் ஆங்கிலக்கதைகளைத்தழுவி நம் சமூக அமைப்புக்குள் பொருத்திய கதைகளே இவை. மோகினி அன்பர்கள் படித்துக் களித்த இரு கதைகள் "பேசாமடந்தை", "ஓர் இரவு" இதில் சேர்க்கப்பட்டுள்ளன. முன்னுரையில் தலைவர் ஸ்ரீ வையாபுரிப் பிள்ளை சிறுகதை இலக்கியத்தைக்குறித்து-நமது பாஷையில் இவ்விலக்கியத்துக்குக் கொடுத்துள்ள, கொடுக்கவேண்டிய ஸ்தானத்தைக் குறித்து-அழகாய் எழுதியிருக்கிறார்.

... 2 புத்தகங்களும் தினமணி வெளியீடுகள்.

—வை. மு. ஸ்ரீ.




# யார்?

ஜோன்புரி ராகம் ரூபகதாளம்

வானை வளைத்தவன் யார்—மேக
வர்ணம் அடிப்பவன் யார்?—விண்
மீனணி கோத்தவன் யார்—எங்கும்
வெண்ணகை செய்பவன் யார்?

கதிர்மதி உருளும்—நெடுங்
காலச்சகடையிலே—காற்றுக்
குதிரையைப் பூட்டி—எங்குங்
கொட்டமடிப்பவன் யார்?

தரையின் மார்பினிலே—பயிராய்த்
தழை பசியவன் யார்?
வரை முடியினின்றே—அருவியாய்
வரும் கருணையன் யார்?

மாதர் மதிமுகத்தில்—அழகின்
மங்கலம் வைத்தவன் யார்?
காதலினால் உலகை—அமைக்கும்
கருமச் சிற்பியிங் கார்?

பஞ்ச பூதங்களையும்—பிசைந்தே
பலவுருச் சமைத்தான்.
நெஞ்சத் துடிப்புடனே—அவனே
நீள உயிர்ப்பவனும்!

சுத்தானந்த பாரதி

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

# உபாஸனை வேண்டும்

"நாம் பாடாதே நாராயணனைப் பாடு" என்பது நம்மாழ்வார் கட்டளை. உலகக் கவிதைகளில் மனித உள்ளத்தை உருக்கி உருக்கி உயர்ந்த பொலிவைத் தந்து, ஆனந்த மயமாக்குவன எவை? கம்பன் வரைக் காட்சி, நீர் விளையாடல், மலர் கொய்தல், உண்டாட்டம், முதலியவற்றைக் காதற்சுவையுடன் வர்ணிக்கிறான். உலக இலக்கியத்திலேயே அப்படிப்பட்ட கவி கிடையாது. வேலும், சேலும், குவளையும், கமலமும், வாளும்; மின்னலும், பொன்னும் முத்தும் பவளமும் குழைத்துக் கூட்டி, அமுதக்கனி பிழிந்து, புதிய புதிய அழகைப் பிசைந்த பெண்களை சிருஷ்டிக்கிறான் கம்பன். இந்த அழகின் வர்ணனை விரிய மனத்தைத் (Vital-mind) தொட்டு ஒரு விறுவிறுப்பைத் தந்து மறைந்து விடுகிறது. உயர்ந்த சித்திரக் கவிதையான நைடதத்தின்காதற் சுவையும் அப்படியே.

ஆனால் கம்பனின் இரணியன் வதைப் படலத்தைப் படித்தாலும், விபீஷண சரணாகதியைப் படித்தாலும், மனத்தில் ஓர் ஆனந்தம் ஏற்படுகிறது. ஏன்? அந்தக் கவிதையின் பொருளான அந்தராத்மா, நம்முள் உள்ளது; அதுவே மகிழ்ச்சி கொள்கிறது. கம்பன், துளசிதாஸ், வில்லிபுத்தூரார் ஆகிய எல்லா மஹா கவி[illegible]ம் இறைவனுடைய திவ்ய கல்யாண குணங்களைப் பாடிப் பேரின்பம் பெறவே தமது கவி வாணியை அர்ப்பணித்தனர்.

முற்குணத் தவனே
முதலோன் அவன்
நற்குணக் கடல்
ஆடுதல் நன்றன்றே?

பரமசாத்விகனான எம்பெருமானுடைய திவ்யகுண சாகரத்தில் கம்பன் விளையாடுகிறான். அதனாலேதான் இராமாயணம் இன்றுகூட நமக்குப் பேரின்பமளிக்கிறது. மில்தனும், தாந்தேயும், கெத்தேயும், ராஸீனும் நம் உள்ளத்தை அள்ளும் இரகசியம் அவற்றிற்கலந்த பேரின்பச் சுவைதான். தெய்வச் சுவை[illegible] வெல்லம், கலைச்சுவை தே[illegible]காய், சொற்சுவை பருப்பு. ந[illegible] வெல்லத்தால் தேங்காய்த்துண்டு போட்டுப் பிடித்த மிந்திரிப்பருப்புருண்டை எவ்வளவு ருசியாயிருக்கிறது! அதைத் தண்ணீரில் ஊறப்போட்டு வெல்லத்தைப் பிரித்துவிட்டால் சப்பென்றிருக்கும். அதுபோல், தெய்வச் சுவை ஏறிய கவிதைதான் உண்மையான ரசிகரின் உள்ளத்தைத் தொடும்.

தாகூரிடம் ஒருவர் ஹிந்தியில் "பௌதிக சுகம்" என்றொரு கவி பாடி, 'வங்காளத்தில் இப்படிக் கவிதை உண்டா?' என்று கேட்டார். "எனது தாய்மொழியில் இப்படிப்பட்ட கவியில்லை; இனியும் இருக்காமல் கடவுள் காக்

கட்டும். கவிதை என்பதே கடவுளுக்கும் ஜீவாத்மாவுக்கும் இன்பத் தொடர்பூட்டும் நாதக் கலைதான், அந்தத் தொடர்பில்லாததை, வேறு எப்படியாவது அழையுங்கள். கவி என்றுமட்டும் சொல்லாதீர்கள். என்னைச் சித்திரவதை செய்தாலும் உள்ளழகை மறந்து தோலழகையும் புடவை ரவிக்கை யழகையும் பாடிக்கொண்டிருக்க மாட்டேன். ஆத்ம ஸௌந்தர்யத்தின் பிரதிபலிப்பே உடலழகு" என்றார். சந்தேகவாதியான ஷெல்லி பாடுகிறன் கேளுங்கள் :—

Waking or asleep
Thow of death must deem
Things more true and deep
Than we mortals dream
O how could thy notes flow
In such crystal stream!

ஏ வானம்பாடியே, விழிப்பிலும் துயிலிலும் எங்கள் நரக் கனவுகளைவிட ஆழ்ந்த சத்திய வஸ்துக்களை நீ பார்க்கிருய்; இன்றேல் இவ்வளவு தெள்ளினிய கவிகள் உன் உள்ளத்தில் பொங்கி ஓடுமா ?"

அநேகமாக உயர்ந்த கவிகள் யோகிகளாகவே இருந்திருக்கிருர்கள்; உன்னதமான புத்தி அந்தராத்மாவுடன் ஐக்கியமாகும் இன்பத்தில் பூத்து மணப்பதே கவிப்பொலிவாகும். அந்தக் கவிதைதான் உலகில் நின்று நிலைக்கும். மற்றவை சிலகாலம் அபிமானிகளால் மினுக்கி, ஆள் போனதும் அத்துடன் மினுக்கும் மறையும். தற்கால இந்தியாவிலும் ஆயிரக்கணக்கான கவிகள், ஊருக்குப் பத்துக் கவிகள் உண்டு என்றால், தாகூரின் கவிதையை நாம் உயர்த்திவைப்பானேன்? கீதாஞ்ஜலிக்கு நோபல் வெகுமதி கிடைப்பானேன்? தாகூரின் கவிதை அந்தராத்மாவின் ஆனந்தக் கலை—உயிர்ப்பாயிருக்கிறது. அது படிப்பவரின் அந்தக்கரணத்தைத் தொடுகிறது. கவிக்கு ஆழ்ந்த தெய்வ நம்பிக்கை வேண்டும். பரமாத்ம தியானோபாசனை வேண்டும். அப்போதுதான் மனோதீதமான உன்னத ஸ்வரூபங்கள் அவன் உள் விழிக்குப் புலனாகும்; அப்போதுதான் சிருஷ்டி ப்ரபஞ்சத்திற்குப் பின்னே உள்ள நித்திய சுத்த சக்தியை அவன் அறிந்து, ஒவ்வொரு பொருளின் ரஸத்தையும் அனுபவிப்பான். "ரஸோவைஸ:" அவன், இறைவன் ரஸமே; கலைச்சுவையே அவன் நம்முள் ரஸபூரிதனயிருப்பதனாலேதான் ஆனந்தம் உண்டாகிறது. அந்த ரஸந்ததும்பும் கவியே கவி.

---

உங்களது சந்தா நம்பர்

ஒவ்வொரு மாதமும் சஞ்சிகையனுப்பும்போது ராப்பரில் குறிக்கப்பட்டுள்ளது. நீங்கள் கடிதம் எழுதும்போதும் பணமனுப்பும்போதும் அவசியம் எழுதவும்.

விலாசம் மாறுவோர் மாத முடிவிற்குள் தெரிவிக்காமல், சஞ்சிகை பழயவிலாசத்துக்கு அனுப்பித்தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

# 5. சாரதாச் சட்டம்

சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன்பு, நாட்டுப்புறங்களிலும் கிராமாந்தரங்களிலும் என்ன ஆர்ப்பாட்டம்! தேசம் தான் என்ன அல்லோலகல்லோலப்பட்டது! வீட்டுக்கு வீடு கல்யாணம், பொம்மைக் கல்யாணம்போலே. ஒரே பந்தலில் பத்துப் பன்னிரண்டு தாலி கட்டு. மணப்பெண்களா, விளையாட்டுச் சிறுமிகளா? அஞ்சுவயது, ஏழு வயது, பத்து வயது, இன்னம் சொல்லப்போனால் பாவாடை கூடக் கட்டிக்கொள்ளத் தெரியாத மூன்று வயதுக் குழந்தைக்குக்கூடக் கல்யாணம்தான் அந்த வருஷம். குஜராத்திலே பால் குடிக்கும் ஆறுமாதக் குழந்தைக்குக்கூடத்தாலிமுடித்துவிட்டார்களாம். மாப்பிள்ளைகளோ, இவர்களுக்கேற்ற பள்ளிப் பிள்ளைகள்தான். பத்து, பன்னிரண்டு, பதினறு வயதுக்குமேல் இராது.

சென்னப்பட்டணத்திலோ சீர்திருத்தக்காரர்களின் ஆர்ப்பாட்டங்கள், மேடை அதிரப் பிரசங்கங்கள், சம்மானம், கல்லடி, கலாட்டாக்கள்.

“ருதுமதி விவாகம் அன்றோ செய்யவேண்டிவரும், பெண்ணுக்குப்பதினறு வயதுக்குமுன் விவாகம் செய்யக்கூடாது என்ற சட்டம் வந்தால்? அப்பொழுது வைதிக, ஸநாதன இந்துக்களின் கதி என்ன? ருதுமதி விவாகம் செய்து வைப்பவர் நரகத்திற்குப் போவார்கள் என்று சாஸ்திரம் சொல்கிறதே! “கன்யாதானம்” மோக்ஷ ஸாதனமாக இருப்பதற்குப் பதில் நரக ப்ராப்தியாகி விடுமே! இந்தச் சட்டம் வலுக்கட்டாயமாக அமுலுக்கு வருவதற்கு முன்னே கூடியமட்டும் எத்தனை பால்ய விவாகங்கள் நடத்தமுடியுமோ அத்தனையும் நடத்திவிடலாம் என்றுதான் மேலே சொன்ன ஆர்ப்பாட்டங்களெல்லாம்.

ஸநாதன இந்துக்களின் மனப்போக்கே விசித்திரமானதுதான். நல்ல வேளை, சட்டம் வந்தாலும் வந்தது, இப்பொழுது ருதுமதி விவாகத்தைக் காஞ்சி காமகோடி பீடம்கூட அனுமதித்து விட்டதாம்.

இவ்வளவு ஆர்ப்பாட்டத்திற்கும், பீதிக்கும் இடமாக இருந்த அந்தச் சட்டம்தான் எப்படி அமைந்திருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டாமா?

இந்தச் சட்டத்தைச் (சாரதா சட்டம்) என்று பொதுவாகச் சொல்லுவார்கள். இது 1929ம் வருஷம் அமுலுக்கு வந்தது. பிறகு இதற்கு ஒரு திருத்தச் சட்டமும் வந்திருக்கிறது.

இந்தச் சட்டப்படி, 18 வயதுக் குட்பட்டுப் பிள்ளைக்கும், 14 வயதுக் குட்பட்டுப் பெண்

னுக்கும் விவாகம் நடத்துவார்களானல், அது தண்டிக்கத் தகுந்த குற்றமாகும். அதாவது, இந்தச் சட்டம் வதுவரர்களின் விவாக வயதை நிர்ணயிப்பதாக இருக்கிறது. பால்ய விவாகத்தைத் தடுப்பதற்காகவே கொண்டு வரப்பட்டதாகையால் குறிப்பிட்ட வயது பூர்த்தியான பிறகு தான், பெண்ணுக்கோ பிள்ளைக்கோ விவாகம் செய்யவேண்டும் என்பதை வற்புறுத்துகிறது.

இந்தச் சட்டத்தை மீறி விவாகம் நடைபெறுமானல், விவாகத்தில் சம்பந்தப்பட்ட பெற்றோர், புரோகிதர் முதலானோர் தண்டிக்கப்படுவார்கள்.

1. பதினெட்டு வயதுக்கு மேற்பட்டு இருபத்தோரு வயதுக்குட்பட்ட மணமகன் பதினலு வயதுக்குட்பட்ட ஒரு பெண்ணை விவாகம் செய்து கொண்டால், ரூபாய் ஆயிரத்துக்கு மேற்படாதவரை அவரவர் அந்தஸ்துக்கு உரிய அபராதம் விதிக்கப்படும், இந்தச் சட்டப்படி.

2. இருபத்தோரு வயதுக்கு மேற்பட்ட ஒரு புருஷன் பதினலு வயதுக்குட்பட்ட ஒரு பெண்ணை மணந்துகொண்டால் 1000க்கு மேற்படாத அபராதமும், ஒருமாத வெறுங்காவல் தண்டனையும் விதிக்கப்படலாம்.

3. இந்த விவாகத்தை நடத்தி வைத்த புரோகிதருக்கு ரூ. 1000க்கு மேற்படாத அபராதமோ, ஒருமாத வெறுங்காவல் தண்டனையோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படலாம்.

4. ஒரு மைனர்ப் பையன் ஒரு சிறுமியை விவாகம் செய்து கொள்ளும் பக்ஷத்தில், அவனுடைய பெற்றோரோ, சம்ரக்ஷகரோ, அல்லது நெருங்கிய பந்துவோ, மேற்படி விவாகத்தைத் தடுக்காமல் இருப்பாரேயானல் அவர்கள் மேற்கூறிய முறைப்படி தண்டிக்கப்படுவார்கள்.

மேற்கூறியவிவாக வயது-நிபந்தனைகளை மீறிச் சிறுவர்களுக்கு விவாகம் நடக்கப்போவதாக இருந்தால், இந்தச் சட்டம் அதை நிறுத்தத் தடை உத்தரவு பிறப்பிக்கும்படி கோர்ட்டாருக்கு அதிகாரம் கொடுக்கிறது.

இந்தச் சட்டத்தை மீறி நடக்க இருக்கும் விவாகத்தை எவரேனும் தடுக்க விரும்பினல், அவர் கோர்ட்டில் எழுத்துமூலம்பிராது கொடுக்கவேண்டும். அப்படிப் பொய்ப் பிராது கொடுப்பவர் ரூ 100/- ஜாமீன் தொகை கட்ட வேண்டும். பொய்ப் பிராதுகளை தடுப்பதற்காகவே இந்த ஜாமீன் ஏற்பட்டது.

ஆனல் பிராது கொடுப்பவர் நாணயஸ்தர் என்று கோர்ட்டாருக்குத் தெரியுமானல், ஜாமீன் தொகையை வற்புறுத்தவேண்டியதில்லையென்று1938-ம் வருஷத் திருத்தப்படி ஏற்பட்டுவிட்டது.

---


## அமுத மொழி

கிளேஸ் பதிப்பு 2—8

பாதாமி (மஞ்சள்) 2—0 அன்ப்ளீச்ட் 2—0


ஸ்ரீமதி வை. மு. பத்மினி ஸ்ரீநிவாசன்

# பெயர்க் கொலை

"ஜாக்கி! நீ ரெடிதானா?" என்று என் கணவர் கேட்கும்போது எனக்குக் கோபம் கூத்தாடிற்று. சீட்டு கட்டுப்பெயர் எல்லாம் வீட்டில் உலாவுகிறது. என் மாமியார் வீட்டில் ஒவ்வொருவருக்கும் பெயர் வைத்திருக்கும் அழகையெல்லாம் நீங்கள் அறிந்தால் சிரிப்பீர்கள். பழய காலத்துப் பெரியவர்கள் 'குழந்தைகளுக்கு பகவானின் பெயர்களை வைத்து அழைத்தால் அன்றாடம் செய்த பாவம் துலையும்' என்ற நல்லெண்ணத்துடன் பெயர் வைத்தார்கள்: அதன்படிதான் யாவரும் நடப்பார்கள். ஆனால் நாங்கள் அப்படிப்பட்ட வீண் தண்டாவுக்குப் போகமாட்டோம். எவ்வளவோ கஷ்டப்பட்டு சம்பாதித்த பாவங்களை இவ்வளவு எளிதில் போக்கிக் கொள்வதாவது? அப்படியெல்லாம் பகவான் பெயர்களைச் சொல்லும் வழக்கம் எங்களிடம் கிடையாது. எங்க ஆத்துக்காரர் பெரிய கலெக்டர். அவர் எம். ஜி. பால். இந்த பெயரை கேட்டால் அவர் என்ன ஜாதி என்று சொல்வீர்கள்? க்ருஸ்துவனோ, வெள்ளைக்காரனோ என்றுதான் நினைப்பீர்கள். அவர் உண்மைப் பெயரை சொன்னால் தெரிந்துவிடும் அவருக்கு எம். கோபாலன் என்று பெயர். உலகத்தில் எல்லோரும் பாலை சாப்பிடுவார்கள். அது உடம்புக்கு ஆரோக்யம் தரும். ஆனால் என் கணவரோ அந்த பாலைத்தரும் கோவையே சாப்பிட்டுவிட்டார். இப்படித்தான் இவர் வீட்டில் எல்லார் பெயர்களும் இருக்கும். இவர் தம்பிக்கு பச்சல் என்றும், இன்னொருவருக்கு புட்லி என்றும் பெயர். தங்கைகளுக்கோ கேட்கவேண்டாம். ஒருத்திக்கு சாண்டி என்று பெயர். அதை சாமுண்டீ என்றாலும் ஏதோ அர்த்தமுண்டு. மற்றொருத்திக்கு புச்சாணி; அது என்ன எருமை சாணியோ? இப்படித்தான் எல்லாருக்கும் பெயர்கள் விசித்திரங்களாக இருக்கும். ஆனால் எங்க பிறந்த வீட்டில் ஏதோ நல்லகாலமாய் பகவானின்பெயர்களைதான் வைக்கிறார்கள். எனக்கு ஜானகி, என் தங்கைக்கு ருக்மிணி, என் தமயன்கள் இருவருக்கும் ராமநாதன், க்ருஷ்ணமூர்த்தி என்று பெயர். நல்லகாலமாய் அவர்களும் இவ்வளவு நாகரீகத்தில் மூழ்காது இருக்கிறார்களே என்று சந்தோஷப்படுவேன். எனக்கும் புக்ககம் வந்ததும் ஜானகி என்ற பெயர் போய் ஜாக்கி என்று புனர்ப்பெயர் வைத்துவிட்டார்கள். போன புதிசில் ஜாக்கி என்று அழைக்கும் பொழுதெல்லாம் எனக்குத் தலைசுற்றுவதுபோல் இருக்கும்; அழுகையாய்வரும். ஆத்திரமாய் இருக்கும். என்ன கோபம் வந்து என்ன லாபம்? "ஜாக்கியாவது இஸ்பேட்டாவது?" என்று முணுமுணுப்பேன். சில தினங்களில் அதுவே எனக்கும் பழகிவிட்டது. எனக்குக் குழந்தை பிறந்தபொழுது அதற்கு என்ன பெயர் வைப்பது என்கிற கேள்வி எழுந்தது. குழந்தைக்கு கண் விசாலமாய் விழி நீலமாய் அழகாயிருந்தது. எனக்கு கண்ணா என பெயர் வைக்க ஆசை. ஆனால் அவர்கள் ப்ளு என்று வைக்கச் சொன்னார்கள். எனக்கு ஆத்திரமாய் வந்தது. முதலில்கண்ணாஎன்றுவைத்துவிட்டு அப்புறம் இரண்டாவது

பெயர் ப்லூ என்று வைத்தேன். எனக்கு சிறிது மனச் சாந்திக்காகப் பகவான் ஒரு அநுகூலத்தைச் செய்து வைத்திருக்கிறார். அது என்ன தெரியுமா! எங்க வீட்டு வேலைக்காரர்களில் சமையல் காரனுக்கு நாராயணா என்று பெயர், வேலைக்காரனுக்கு ராமன், தோட்டக்காரனுக்கு கணபதி, வேலைக்காரிக்கு லக்ஷ்மி, குழந்தை வைத்துக்கொள்ளும் குட்டிக்கு வேதவல்லி என்று பெயர். இவர்களைத்தான் என் ஆசைதீர அழைத்துக்கொண்டே இருப்பேன். அவர்களுக்கும் ஏன் பெயர் மாற்றவில்லை என்று கேட்கிறீர்களா? அவர்கள் சம்மதிக்காததனால்தான். எனக்கு இந்த பெயர் வைக்கும் விஷயத்தை ப்ரசாரம் கூடச் செய்துவிடலாமா என்று இருக்கும். அதுதான் முடியவில்லை. நீங்களாவது இப்படி அநாகரிகப் பெயர்கள் வைக்காது நல்ல பகவான் பெயர்களை வைத்து ஆசை தீர அழையுங்கள்.

---



ஜடாயு - ராவண யுத்தம்

ஸ்ரீமதி R. புண்யவதி B. A.

# வாழ்க்கையின் முட்கள்

நம் வாழ்க்கை எப்போதும் ஒரே விதமாகத் திகழ்வதில்லை. வாழ்க்கைப் படகு அமைதி என்னும் சாகரத்தில் என்றும் செல்வதில்லை. கடும் காற்று, இடி, மின்னல், சுழல், கொந்தளிப்பு முதலியவைகள் போன்ற துன்பங்கள் நம் வாழ்க்கைப் படகை எதிர்க்கின்றன. வாழ்க்கையில் நாம் எத்தனையோ மேடு, பள்ளங்களைக் கடக்கவேண்டும். இரவும் பகலும் மாறி வருதல் போன்றே இன்பமும் துன்பமும் மாறி வருகின்றன. நம் வாழ்க்கையில் தோன்றும் துன்பங்களைத்தான் முட்கள் என்று குறிப்பிடுகிறேன். உண்மையில் அவைகள் முட்களா என்பதை ஆராய்வோம்.

"அழகையை நேசி. சந்தோஷத்தை வெறு" என்கிறார் கவி காளிதாசர். "துன்பங்களே இறைவன் தன் அன்பர்களுக்கனுப்பும் அழைப்பிதழ்" என்கிறார் சுவாமி ராமதாஸ். "அல்லலற்ற வாழ்க்கை ஆனந்தமற்ற வாழ்க்கை" என்கிறார் மற்றொரு அடியார். "துன்பமே ஞான போதகர். வாழ்க்கையில் நற் செயல்கள் துன்பத்தின் மூலமே வருகின்றன" என டாக்டர். அனி பெசண்ட் அம்மையார் நவிலுகிறார். "வாழ்க்கையில் வரும் இன்னல்களே இறைவனால் அனுப்பப்படும் அன்பின் அஸ்திரங்கள்" என்கிறார் மற்றொரு பெரியார். கிறிஸ்தவ மத வேதத்தில் "துன்பம்" ஆவியின் கனிகளில் ஒன்றாக கருதப்படுகிறது.

பாண்டவர்களது அன்னையாம் 'குந்திதேவி' கணக்கற்ற கஷ்டங்களை அனுபவித்தஞான்றும் கிருஷ்ண பரமாத்மாவினது நாமத்தை ஜெபித்துக்கொண்டு சந்தோஷமாயிருந்தாளாம். பகவான் பிரத்தியட்சமாகிய காலத்தில், தனக்கு என்றும் இன்னல்களே வேண்டுமென்றும், துன்பங்களது மத்தியில் மாதவனை நினைக்கவும், துதிக்கவும் தருணங்கள் மிகவாகக் கிடைப்பதாகவும், துன்பங்களே தனக்கு அதிகமாக வேண்டுமென்றும் வரமளிக்க வேண்டினாளாம். இதன் உண்மையை நம் வழக்காற்றில், நடைமுறை வாழ்க்கையில் காணலாம். எத்தகைய கல்நெஞ்சனாயிருந்திடினும் கஷ்டம் வருங்கால் அவனையுமறியாது கடவுளைப் பற்றிய ஞாபகம் கட்டாயம் தோன்றும். கஷ்டகாலத்தில் நாம் கடவுளை நினைப்பது உலக இயல்பே. ஆகவே நம் வாழ்க்கையின் துன்பங்களே மாயையிலிருந்து நம்மை மாற்றும் ஞானகுரு. இரும்பை காந்தம் இழுக்குமாப்போல் துன்பங்களே நம்மை இறைவனிடம் இழுத்து, அவரை நாடவும் செய்கின்றன. பட்டகாலிலே படும். கெட்ட குடியே கெடும் என்பதற்கிணங்க, சில வேளைகளில் இன்னல்கள் அடுத்தடுத்து வருதல் இயல்பு. அஞ்ஞான்று, தளர்வு, நம்பிக்கையின்மை, அச்சம், சினம், வருத்தம் முதலியவை தலையெடுக்க ஆரம்பிக்கும். ஆனால் உண்மையில் அவைகளுக்கு எதிரிகளான நன்னம்பிக்கை, அச்சமின்மை, உறுதி, சாந்தம், பொறுமையே நம்மிடை தோன்றி வெற்றிபெற வேண்டும். இதைத் தான் "துன்பம் நெருங்கி வந்தபோதும் நாம் சோர்ந்துவிட

லாகாதடி பாப்பா" என்று வெகு நயம்பட சிறு குழந்தைக்குக் கூறுவதுபோல் கூறியதுமன்றி, வறுமை அல்லல்மேல் அல்லல் முதலிய நவில வொண்ணாத துன்பங்கள் அவரைச் சூழ்ந்த ஞான்றும், சோர்ந்துவிடாது வாழ்க்கையில் வெற்றியே பெற்றார் பாரதியார். சமீபத்தில் காந்திஜி, சிறைச்சாலையில் மற்றைய கைதிகளைப்போன்ற நிலையிலேயே இருந்த போதும், இதர கைதிகள் வாடிய வதனத்துடன் வதியுங்கால், புன்னகை தவழும் முகத்துடன் பொலிவுடன் திகழ்ந்தாராம். "இடுக்கண் வருங்கால் நகுக" என்ற வள்ளுவர் வாய்மொழியைக் காந்திமகான் தன் வாழ்க்கையில் மெய்ப்பித்ததை நோக்குக.


தன் வாழ்க்கைப் படலத்தில், சொல்லம்புகளால் சோகமுற்றும், மனைவி மக்களால் புறக்கணிக்கப்பட்டு, புறக்கண் இழந்து, எல்லையற்ற கஷ்டங்களை அடைந்த போதும், "ஒரு சுவர்க்கத்தை சிருஷ்டிப்பதும் ஒரு நரகத்தைத் தோற்றுவிப்பதும் நம் மனமே' என்றியம்பி தம் வாழ்க்கையில் நிரூபித்தார் ஆங்கிலக் கவி மில்டன். துன்பத்தைத் துன்பமென்று கருதுதல் தவறு. ஒரு சிறு உதாரணத்தைக் காண்போம்.

ஒரு கோமகன் கண்ணாடிகளினாலேயே ஒரு அறையை அலங்கரித்தானாம். அக்கண்ணாடியில் தன் பிரதி பிம்பத்தைக் கண்டு ஆனந்தமுற்று அறையைவிட்டகன்றான். அதற்குப் பின்னா அவரது நாய் அறைக்குச் சென்றதாம். தன் பிரதிபிம்பத்தைக் கண்டு, வேறொரு நாய் இருப்பதாக நினைத்து குலைத்துக் குலைத்து முடிவில் இறந்ததாம். துன்புற்றக்கால் மனிதனது நிலையும் இத்தன்மையதேயாம். நமக்குறும் துன்பங்களை இன்பமாகப் பாவிக்க வேண்டும். ஆன்ம வீரராகிய அப்பர் தனக்குற்ற எல்லையற்ற துன்பத்தையும் பொருட்படுத்தாது, "இன்பமே என்றும் துன்பமில்லை" என்று இயம்பியுள்ளார். ஆகவே துன்பத்தைத் துன்பமாகவே பாவித்திடின், நாய் இறந்ததையொப்ப வருத்தம் குடிகொண்டு, இறுதியில் இரங்கத்தக்க நிலையை எய்துவோம்.


நிற்க, வெய்யிலில் அலைந்தவனுக்கே நிழலின் அருமை தெரியும். அவ்வாறே துன்பத்தை நுகர்ந்தவருக்கே இன்பத்தை அனுபவிக்க முடியும். இன்பமும் துன்பமும் இரட்டைக் குழந்தைகள். அயலகத்தாராம் ஒரு தலைவன் தன் மனைவியிடம், விருந்தினனாக வரும் ஒரு குருட்டு நண்பனுக்குச் சமையல் செய்யப் பணித்தானாம். அவளோ, அந்த குருட்டு நண்பருடன்கட்டாயம் அவருடைய துணைவரும் வ்ருவார் என்று ஊகித்து, இருவருக்குச் சமைத்தாளாம். குருடனுடன் அவனது வழிகாட்டி இணைபிரியாதிருத்தலை நிகர்த்து, இன்பமும் துன்பமும் இணைபிரியா சகோதரர்கள். சுகந்தமான வாசனைப் பொடிகளை இடித்துப் பிழிந்தாலன்றி வாசனைத் திரவியங்கள் கிடையா. கரும்பை ஆலையிலிட்டுக் கசக்கினாலன்றி இனிய சர்க்கரை கிடையா. அவ்வாறே துன்பத்தின்மூலமே இன்பத்தைமுற்றும் நுகரலாம். நாணயங்கள் நன்றாய் ஓசைப்பட மட்ட உலோகங்களையும் கலத்தல்போன்று, துன்பத்தாலும் இன்பத்தாலுமே நம் வாழ்க்கை இனிமைப்படும்.

சுகந்தமான மணமமைந்த ரோஜா மலரின் பாதுகாவலின் பொருட்டு, இறைவன் அதற்கு முள் கொடுத்திருப்பது போன்று, நமது நன்மையைக் கருதி நமக்கும் முட்கள் இறைவன் கொடுத்திருக்கிறார்

# போட்டோ பகுதி



வர்க்கலை எனும் ஜனார்த்தன க்ஷேத்திரக் கோவிலில் ஒரு காட்சி.



இந்தியாவின் தோட்டம் என்று கொண்டாடப் படும் மைசூர் சமஸ்தானத்தின் சிறப்புகளில் ஒன்றான லால்பாக், பெங்களூர்.

வை.மு.ரா

# மனிதன் ஏன் மரணம் அடைகிறன்? 4

காப்டன். என். சேஷாத்ரிநாதன் M.B, B.S, D.T.M.

"பேசுகிறதற்கு வேறு நல்ல விஷயமில்லையா! சாவைப்பற்றிப் பேசுவானேன்?" என்று கேட்கலாம். எங்கள் தெருவில் அடிக்கடி வாத்தியகோஷம் கேட்கும். அவசர அவசரமாக வாசலில்போய்ப் பார்த்தால் சில தருணங்களில் சுவாமி பவனிவருகிற காட்சியும் இல்லை; கலியாண ஊர்கோலமும் இல்லை; கடைசி ஊர்கோலத்தைத்தான் பார்க்க நேரிடும். உலகத்தில் பிறப்பு உண்டானல் இறப்பும் உண்டு. ஆகவே, உயிரைக் குறித்துப் பேசலாமென்றல் இறப்பைக் குறித்தும் ஏன் பேசலாகாது?

"மனிதன் ஏன் மரணம் அடைய வேண்டும்? அவன் நித்தியமாக வாழ முடியாதா? முன் காலத்தில் மனிதன் ஆயிரக் கணக்கான வருஷங்கள் வாழ்ந்ததாகப் புராண கதைகளில் கேள்விப்பட்டிருக்கிரேமே. இக்காலத்திலும் அப்படி ஏன் வாழக்கூடாது?" என்று கேட்டால், இயற்கைத் தெய்வத்தின் சித்தமென்றே சொல்ல வேண்டும். மேலும், புராணத்தில் சொல்லியிருப்பதெல்லாம் உண்மை என்று யாரால் நிரூபிக்கமுடியும்? மனிதனுக்கு வயது நூறுதான் என்று மனுஷ்யசரித்திர விஞ்ஞானிகள் கூறுகிருர்கள். ஆனல், நூறு வயதுக்கும் அதிகமாகச் சிலர் இன்றைக்கும் வாழ்ந்து வருவதாகக் கேள்விப்படுகிரேமே. அற்பாயுசும் நீடித்த வாழ்வும் பாரம்பரியமாக ஏற்படுகிறவை. ஆயினும் நம்மைச் சூழ இருக்கும் வாழ்க்கை நிலையையும் பழக்க வழக்கங்களையும் சீர் திருத்திக்கொண்டால் நமது வாழ்நாளையும் நீடிக்கச் செய்யலாம் என்பது தெளிவு.

இவ்வாறு வாழ்நாளை நீடித்துக் கொள்வதற்கும் ஒரு அளவு உண்டு. உடல்—வளர்ச்சி என்பது ஆரம்பத்தில் வேகமாய் வளர்ந்து பின்பு குறைவுபடும் சூர்ய வெளிச்சம் போன்றது. ஆகவே, மானிட வாழ்நாளை உதயகாலமென்றும் உச்சிக் காலமென்றும் அஸ்தமன காலமென்றும் பாகுபாடு செய்யலாம். உதயகாலம் என்பது சுமார் 30 வருஷம் நீடித்திருப்பது. இந்தக் காலத்தில் உடல் வளர்ந்து முதிரும். இதற்குப் பிறகு சுமார் நாற்பது வயதளவும் உச்சிக்காலம் எனலாம். இதற்குப் பிறகு மெதுவாய் நரம்புகளும் தசைகளும் க்ஷீணிக்கத் தொடங்குகின்றன. இந்த நிலைமையில் உடல் நோய்க்கும் ஆபத்துக்கும் இடங்கொடாமல் இருந்தால் சுமார் 40 வருஷம் மனித வாழ்வு நீடிக்குமென்று தீர்மானமாகச்சொல்லலாம்

இதற்குப் பிறகு நமது உடலில் இருக்கும் ஒவ்வொரு ஜீவ அணுவும் வளர்ச்சியிலும் பெருக்கத்திலும் குறைந்துவிடுகிறது. இரத்தக் குழாய்கள் முன்போல வேலை செய்வதில்லை. உணர்ச்சி நரம்புகள் மந்தமடைகின்றன; அவயவங்கள் தளர்ந்துவிடுகின்றன. ஜீர்ண சக்தி குறைவுபடவே, உண்ணும் உணவுப் பொருள்கள் ஜீர்ணக்கருவிகளுக்கும் மலஜலம் கழிக்கும் அவயவங்களுக்கும் பாரமாகிவிடலாம். முன்

போல் அதிக வேலை செய்யவோ, அதிகமாக உண்ணவோ முடியாது. உடலில் எல்லா அங்கங்களிலும் அவயவங்களிலும் நீரோட்டம் குறைந்துவிடுகிறது. நரம்புகள் ஒன்றுக்கொன்று ஒத்துழையாமல், பழைய மோட்டார்க்கார் ஒன்றிலே அதிக பாரம் ஏற்றுவதினால் ஏற்படுகிற விபத்து உடலுக்கும் ஏற்படலாம். இருதயமோ மூத்திரகோசமோ மூளையைச் சுற்றியிருக்கும் ரத்த நரம்புகளோ கேடு அடைந்து வெகு சீக்கிரமாக மரணத்தை அணுகிவரச் செய்யும்.

ஒருவனை 'இவன் உயிர் இழந்தான்' என்று எப்பொழுது சொல்லலாம்? இதற்குப் பதில் சொல்வது கஷ்டமா? என்பார்கள். மூச்சு நின்றுவிட்டது; நாடியும் அடிக்கவில்லை; இவன் இறந்தான் என்று சொல்ல. இவை போதுமல்லவா?

ஆனால், வைத்தியர்கள் இதை ஒப்புக்கொள்ளமாட்டார்கள். உடல் அசையாமலும், மூச்சு விடுவது கண்ணுக்குப் புலப்படாமலும் தன் நினைவிழந்த யோகி போன்ற ஒருவகை நிலையும் உண்டு. இப்படிப்பட்ட நிலையை மரணமென்று சொல்லமுடியுமா? இந்நிலையில் இருக்கும் உடலில் படிப்படியாக உயிர்தோன்றி வெளிப்படக்கூடுமே. நீரில்விழுந்து மூழ்கினவனைச் சீக்கிரமாக எடுத்துவிட்டால், அவனுக்கு மூச்சு நின்று தன் நினைவற்றிருந்த போதிலும் இருதயம்மட்டும் அடித்துக் கொண்டிருக்கும். சில வேளைகளில் இருதய ஓட்டம் நமக்குப் புலப்படாமலே இருக்கலாம். இந்த நிலைமையில் மூச்சு உண்டாவதற்கான விதிகளைக் கையாடி மறுபடியும் இருதயஇயக்கத்தை உண்டு பண்ணிப் பிழைக்கச் செய்துவிடலாமே. விசேஷமான வைத்திய முறைகளைக்கையாடி, நின்றுபோன இருதயத்தையும் இயங்கவைத்து இறந்தவன் என்று தோன்றிய மனிதனையும் பிழைக்கச் செய்யலாமே. தவளை, ஆமை இவைகளைப் போன்ற பிராணிகளை அறுத்து இருதயத்தைத் திறந்து வைத்தாலும், இருதயம் வெகுநேரம் அடித்துக் கொண்டிருக்கும்; மூச்சு இராது, உடலின் மற்ற இயக்கங்கள் ஒன்றுமே இரா. இப்படி இருதய இயக்கத்தைமட்டும் கொண்டிருக்கும் இந்தப் பிராணிகளைத் திரும்பப் பிழைப்பிக்க முடியாது. இந்தப் பிராணிகளின் இப்படிப்பட்ட நிலையிலிருக்கும் உடலை இறந்துபோகவில்லை என்று சொல்லமுடியுமா?

இவ்வாறு உயிர் மறைந்திருப்பதைப் பார்க்கும் போது உயிர் உடலிலே ஒரே இடத்தில் இராமல் ஒவ்வொரு ஜீவ அணுவிலும் இருக்கிற ஒவ்வொரு உயிரும் தத்தம் கருமத்தைச் செய்வதோடு ஒன்றுக்கொன்று இசைந்து மனித சரீரமாகிற மண்டலத்திலே ஸமூக கர்மத்தையும் நிறைவேற்றி வருகிறது. இந்த ஸமூக கர்மம் மனித உயிராகப் பரிணமிக்கிறது. இருதயம், மூளையின் மூலஸ்தானம், சுவாஸக் கருவிகள் முதலிய முக்கிய அங்கங்கள் ஏதேனும் ஒரு காரணத்தினால் வேலை செய்யாமல் நின்றுவிட்டால் மனித உயிர் பிரகடனமாகாது; உள் அடங்கிவிடும். வெகுநேரம் வரையில் ஒவ்வொரு ஜீவ அணுவும் தங்களால் கூடின மட்டும் உயிரைக் காப்பதிலேயே முனைந்து நிற்கும். இருதயமும் சுவாசக் கருவிகளும் சீக்கிரமாகவே வேலை செய்யத் தொடங்கிவிட்டால் இந்த ஜீவ அணுக்களிலே உயிர் மலர்ச்சி உண்டாகி, ஸமூக உயிராகி, மனித உயிராகப் பரிணமிக்கிறது. உண

வையும் உணர்ச்சியையும்அடையும் பொருட்டு ஸமூக வாழ்க்கையைக் கோரிக்கொண்டிருக்கும் இந்த ஜீவ அணுக்களுக்கு அவை வெகு நேரமட்டும் அகப்படாவிட்டால் மரணம் சம்பவிக்கும்.

(தொடரும்)

# உன் கருவிழியிற் கண்டேனே.

பெண்ணாய் மண்ணிலே பிறந்த நாள்முதலாய்ப்
பேதை நெஞ்சிலே பிறந்த ஆசைகளும்
கண்ணாய்க் காத்தனின் காதல் நாடகமும்
கண்ணே ! உன்கரு விழியிற் கண்டேனே.

விண்ட மலர்தனைக் கண்டு மகிழ்கொண்டு
விரைந்து வந்துசெந் தேனுண் டிசைபாடும்
வண்டின் நெஞ்சிலே வாய்த்த உவப்பெல்லாம்
வண்ணக் கருவிழி தன்னிற் கண்டேனே.

விண்ணில் வெண்ணிலா வந்து விளங்கிடவே
விரும்பி அழைத்தஎன் நெஞ்சில் அரும்பிநின்ற
எண்ணில் சிந்தனை எல்லாம் கண்டேன், உன்
இணையில்லா இரு கண்ணில் கண்டேனே.

பண்ணும் பாடலும் படித்த கதைகளும்
பயின்ற கலைகளும் பார்த்த படங்களுந்தான்
கன்னிப் பருவம் தனில்காட் டியவெல்லாம்
கண்ணே ! உன்கரு விழியிற் கண்டேனே.

பெண்ணின் தகைமையைப் பேணி நின்றஅந்நாள்
வெண்ணில வதனில் நண்ணிய கண்ணாளன்
கண்ணிற் கண்கலந்து கனிந்த இன்பந்தான்
கண்ணே ! உன்கரு விழியிற் கண்டேனே.

கண்ணுக் கினியவன் கண்ணன் தன்னழகை
எண்ணும் வண்ணமே இணைத்த கண்மலர்கள்
கண்ணைக் கவர்ந்தென் உளத்தில் கரந்தவிந்தை
கண்ணே ! உன்கரு விழியிற் கண்டேனே.

பி. ஆர். ராஜசூடாமணி

ஸ்ரீமதி விரஜாதேவி

# உண்மைத் தத்துவம்

உண்மை, மெய்மை, வாய்மை என்பன ஒரே பொருளுடையன போல் தோன்றினும், நுணுகி ஆராய்ந்தால் சில சிறப்புகளைக் காணலாம். உள்ளத்தாற் பொய்யாது ஒழுகலை, உண்மை எனவும்; மெய்யி (உடம்பி)னால் பொய்யாது ஒழுகுதலை மெய்மை எனவும், வாயினால் பொய்யாது ஒழுகுதலை வாய்மை எனவும் சிறப்புப் பொருளாகப் பேரறிஞர்கள் தம் மேதையினால் ஆராய்ந்து அழகுபெறக் கூறுவர்.

உண்மையென்பது கடவுளென்றும் கடவுள் என்பது உண்மை என்றுமே கூறலாம். சத்தியம் எங்கு சம்பூரணமாய் இருக்கின்றதோ அங்கு இறைவன் இருக்கிறான் என்பது ஆராய்ந்தவர் கண்ட முடிபு. உண்மை எங்கு, எவரிடம், எப்பொழுது இல்லையோ அங்கு அவரிடம் அப்பொழுது கடவுளும் இல்லையாகும்.

"உள்ளத்தாற் பொய்யாதொழுகி
னுலகத்தார் உள்ளத்துளெல்லாமுளன்"
"யாமெய்யாக் கண்டவற்றுளில்லை
யெனைத் தொன்றும் வாய்மையினல்ல
பிற"
"வாய்மை யெனப்படுவ தியாதெனின்
யாதொன்றுந் தீமையிலாத சொலல்"
"புறந்தூய்மை நீரானமையு மகந்
தூய்மை வாய்மையாற் காணப்படும்"
"மனத்தொடு வாய்மை மொழியிற்
றவத்தொடு தானஞ்செய் வாரிற்றலை"

என திருவள்ளுவ நாயனார் கூறியிருத்தல் எம் கொள்கையை வலியுறுத்துமாறு காண்க.

இன்னும், திருமூல நாயனார் அருளிய திருமந்திரத்தில் எட்டாம் தந்திரத்தில் வாய்மையைப்பற்றிப் பேசுமிடத்து:—

மெய்கலந்தாரொடு மெய்கலந்தான்
றன்னைப் பொய்கலந்தார் முன்புகுதா
வொருவனை
உய்கலந் தூழித் தலைவனுமாய்நிற்கு
மெய்கலந்தின்பம் விளைந்திடு
மெய்யர்க்கே'
மெய்கலந்தாரொடு மெய்கலந்தான்
மிகப் பொய்கலந்தாருட் புகுதாப்
புனிதனை
கைகலந்தாவி யெழும்பொழு
தண்ணலைக் கைகலந்தார்க்கே
கருத்துறலாமே.
கைகலந்தானைக் கருத்தினுணந்தியை
மெய்கலந்தான்றன்னை வேத
முதல்வனைப்
பொய்கலந்தார் முன் புகுதாப் புனிதனை
பொய்யொழிந்தார்க்கே புகலிடமாமே.

எனவும் பொய்யின் இழிவையும் மெய்யின் உயர்வையும் கூறியிருத்தல் காண்க.

உயர்திரு சுவாமி சுத்தானந்தபாரதி அவர்களும் தமது அறநூல் கடவுளியலில்:—

"மகிழ்விற் படைத்தளித்து மாற்றுங்
கடவுள் அகத்தூய்மையாலே யறி"
"வாய்மை நலனேன்பு, வன்றேன்
டடக்கமிவை தூயோனைச்சேருந்துணை"

எனவும் தமது அனுபூதியில் எழுந்த பேருண்மைகளைக் கூறியிருத்தல் காண்க.

அறிவை நல்வழியில் உபயோகப் படுத்தாத குற்றத்தால் இன்றைய மக்களிடம் கடவுட்டன்மை முற்றும் குன்றிவிட்டது. ஆயினும் கண்டத்துக்குமேல் நாவின் இடத்து மாத்திரம் சில மக்கள் 'கடவுள் கடவுள் கடவுள்' என அடிக்கடி பிதற்றுவர். அது எவ்வளவு பொய்கலந்த மொழி என்பது புத்திமான்களுக்கு புலப்படாமற்போகா. உடலமைப்பில் மனிதர்போன்று காணப்படுபவர் மன அமைப்பில் மிருகங்கள் போன்று உளர். மக்களின் வெளி உடலைப்போன்று உள்ளத்தையும் பிறர் காண இயலுமாயின் தீய

உள்ளம் படைத்த அனேக மக்கள் வெளியில் உலவத் தயங்குவர். ஏனென்றால் வெட்ககரமான கசுமலங்கள் மனதில் புதைந்து கிடத்தலினால் என்க. நாள்தோறும் மனதில் உதிக்கும் எண்ணங்களையெல்லாம் உள்ளபடி உலகிற்கு எடுத்துச் சொல்ல யாருமே வெட்கப்படுவர். இத்தகைய பரிதாபகரமான நிலைமையிலிருக்கும் மாந்தர் தம்மைப் பற்றிப் பெருமைமிகப் பாராட்டுகிறார். என்னே! ஒன்றையும் நுணுகி ஆராய்ந்து பார்க்கும் நிலைமையில் இல்லாத இக்கால மக்கள் சிலரிடையில், உடலையும், வீட்டையும், நாட்டையும், வெளித்தோற்றங்களையும் மாத்திரமே அழகுபடுத்தி வேஷம்பூண்டு உள்ளதை வேறுபடுத்திக் காட்டுதலிலேயே புத்தி போகின்றது. பாங்குடன் ஆடை அணிபவர், சிறப்புடன் வீட்டை வைத்திருப்பவர் மதிப்புடன் நிமிர்ந்து நடப்பவரையே மேன்மக்களெனக் கருதப்படுகின்றது. இந்நிலைமை குன்றியவர் ஜன சமுதாயத்தின் முன் தோன்றத் தகுதியற்றவர் என்றும் எண்ணப்படுகிறது. வாரம் மும்முறை முகக்ஷவரம் செய்வதும், நிமிஷந்தோறும் மாப்பூசுவதும் தினம் மூன்றுமுறை உடை மாற்றுவதும் மேன்மக்கள் லக்ஷணமெனக் கருதப்படுகிறது. இவ்வகைப்புறச் செயல்களால் மாத்திரம் குற்றங்கள் மறைந்து குணமுடையவரெனக் கருதப்படுதல் எப்பொழுதும் இயலாததொன்று. உடலையும் பிறவற்றையும் அலங்கரிப்பது யாருக்கும் எளிது. உள்ளக் கோயிலை ஒழுங்குபடுத்துபவனே உத்தமனாவான்.

இக்காலச் செல்வர்சளில் பலர் வாயினால் வேதாந்தம் பேசிச் செயலினால் திருட்டுவேலை செய்துப் பிழைத்து வருகின்றாரென எங்கும் பேசிக் கேட்கப்படுகிறது. தினமும் கோவிலுக்குப் போவதாலும், விளம்பர அன்னதானம் செய்வதாலும், தமது செயலை மறைத்துத் தம் மனஸையே சமாதானம் செய்வோரும் பலர் உண்டு. தமது கரவொழுக்கத்தை மறைக்க முயலும் வாயிலாகவே தம் செயல் பெரிதும் விளம்பரப்படுத்தப் படுகின்றது. உண்மையாக ஒழுகுபவர்களுக்கு உறுதியாக ஆண்டவன் அருள் புரிந்து காப்பாற்றிவருவது இன்றும் பார்க்கலாம்.

மனிதர்களுக்கு மிருகங்கள் வாயில்லாப் பிராணிகளாக இருத்தல்போன்று, செல்வர்களுக்கு ஏழைகளும், வலியவர்களுக்கு எளியவர்களும், ஆண்களுக்குப் பெண்களும், அரசர்களுக்குக் குடிகளும் வாயில்லாப் பிராணிகளாக இருக்கின்றனர். செல்வர்கள் தமது செல்வச் செருக்கினால் ஏழைகளை அவர்களின் அபிப்பிராயமின்றியே அடிமையாக ஆண்டுவருகின்றார்கள். இச் செயல்கள் நீடித்து நிகழ்ந்துவர முடியாதென்பது அச் செல்வர்கள் அறிவதில்லை, சமயம் வாய்க்காததால் எதிர்த்துப் போர்புரியாது விலகிச் செல்பவர்களைப் பேடிகளென நினைப்பதும் அவர்களால் பின் எதிர்க்கப்படும்பொழுது ஆண்மை உடையவர்கள் என்பதும் தாம் கருதியது பிழையென்பதும் தெரியவரும்.

கடமை, கடன் என்பன ஒரு பொருளுடைய வார்த்தைகளாகும். கடமை சரியாக நிகழாதபோது பிணி உண்டாகும். உடல் உணவை ஜீரணிக்கச் செய்யாதபோது நோய் உண்டாகும். அதுபோல் மக்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யாதபொழுதும் ஒருவகைப்

பிணி அவர்களைப் பாதிக்கும். நோய் சிறிதாகத் தோன்றும் ஆரம்ப காலத்திலேயே நிவர்த்திக்கு வழி தேடாவிடின் நோய் முற்றிப் பெரிதும் துன்பத்தை விளைத்துத் துயர் செய்யும். வாதம் அதிகரிப்பின் காலைத்தான் முடக்கும் அன்றி கையைத்தான் இழுக்கும் என்பது நிச்சயமில்லை. அதைப்போல் ஒருவன் செய்யுந் தீமைக்கு இன்ன வகையில்தான் தண்டனை கிடைக்குமென்பதில்லை. எவ்வகையிலேனும் எவராலேனும், எக்காலத்திலேனும் முன்வினைக்கும் ஏற்பத் தீங்கு விளையும் என்பதுமட்டும் முழு உண்மையாகும். தண்டனைக்குதப்பினேமென்பதுமட்டும் எப்பொழுதும் இல்லை.

ஒருவரை ஒரு விஷயத்தில் ஒரு நேரத்தில் ஏமாற்றலாமாயினும் பலரைப் பல விஷயத்தில் பல நேரத்திலும் ஏமாற்றித் தப்பித்துக்கொள்ள முடியாதென்பதை நன்கு தெரிந்துகொள்ளவேண்டும். இயற்கையே கடவுளின் ஆணையாகப் பரிணமித்துச் செயல் புரிகின்றது. இயற்கை விதிகள் எல்லா மக்களுக்கும் எக்காலத்தும் எல்லாத் தேசங்களுக்கும் பொது. அது ஒருபொழுதும் மாறுவதில்லை. இந்த உண்மைத் தத்துவங்களை யாவரும் ஊன்றி ஆராய்ந்து சிந்தித்துத் தெளிந்து உண்மை நிலையில் நின்று உத்தம வாழ்க்கை நடத்தி உயர் பரம்பொருளின் திருவடி நீழலை அடையவேண்டுமென்பதே இக் கட்டுரையின் நோக்கம்.

"குற்றம் நீக்கிக் குணம் கொள்ளின்
செற்றம் நீங்கிச் சிறப்படையலாம்"



★

"குருவிக்காரி, குருவிக்காரீ! செத்தெ இரேன்! எங்கம்மா நவராத்திரிக்காக எங்க ராஜத்துக்குத் தினேம் ஒரு வேஷம் போட்ரா! நீயிரு. அம்மாவை வந்து ஒன்னெப் பாத்தூட்டு ஒரு நாளைக்குக் குருவிக்கார வேஷம் போடச் சொல்ரேன் எங்க அக்காக்கு!

★

# சங்கீதத்தின் வசிய சக்தி

சங்கீதத்தின் நிகரற்ற வசியசக்திக்குக் காரணமாயிருப்பது எந்த அம்சம்? பாடுபவரின் சாரீர இனிமையா? அல்லது நாதத்தை எழுப்பும் வாத்தியத்தின் ஒலியா? அல்லது பாடப்படும் பாட்டின் (மெட்டின்) கவர்ச்சியா? அல்லது தாளக்கட்டா? அல்லது பாட்டின் அர்த்த விசேஷமா?-இதுபோன்ற பல கேள்விகளைக் குறித்து பெரும்பாலோர் எழுதவேயில்லை. அனேகமாக எல்லோரும் சங்கீதத்தின் ஆகர்ஷண சக்திக்குக் கட்டுப்பட்டவர்களைப்பற்றிய உதாரணங்களே எழுதியிருக்கிறார்கள். இவ்வாறு எழுதியுள்ள கட்டுரைகளுள் மிகவும் சிறந்ததெனக் கருதப்பட்டது ஸ்ரீமதி மல்லிகை சுந்தரம் எழுதியதே. அளவுக்கு மீறி மிகவும் பெரிதாயிருப்பதால் (சுமார் 6 பக்கங்கள்) நந்தவனத்தில் வெளியிடுகிறேன். இரண்டாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது ஸ்ரீமதி எம். சுந்தரா எழுதியது. அதுவும், மூன்றாவதாகக் கருதப்பட்ட ஸ்ரீமதி ராதாபாயின் கட்டுரையும் கீழே பிரசுரிக்கப்படுகின்றன. வழக்கம்போல் முதல் இரு கட்டுரைகளுக்கும் ரூ. 5-விதமும், மூன்றாவது கட்டுரைக்கு ரூ. 3-ம் பரிசு அளிக்கப்பட்டுள்ளது.

வை. மு. கோ.

## 2

ஸ்ரீமதி. எம். சுந்தரா

நல்லவெயில் வேளை. ஒரு தினைப் புனம். கதிர்களெல்லாம் பாரம் தாங்கமாட்டாமல் புது மணப் பெண்ணைப்போல் தலை குனிந்து இளந் தென்றலில் உல்லாசமாக ஆடி அசைந்து கொண்டிருந்தன. வளமை மிகுதியால் கதிர்களெல்லாம் அசாதாரணமான உயரத்துடன் வளர்ந்திருந்தன. யானை புகுந்தால்கூடத் தெரியாது; அவ்வளவு உயரம். இதைத் தெரிந்து கொண்டுதானோ என்னவோ, ஒரு பெரிய யானை தினைப்புனத்துள் புகுந்து கதிர்களை உண்ண ஆரம்பித்தது.

எங்கிருந்தோ ஒரு தீங்குரல் காற்றில் மிதந்து வந்தது. தூரத்தில் தினைக்கொல்லையைக் காவல் காக்கும் குறிஞ்சிநிலப் பெண்ணொருத்தி சுனையில் நீராடிவிட்டுப் பரண்மேல் நின்று தன் கருங் கூந்தலை காற்றில் ஆற்றிக்கொண்டிருந்தாள். சுனை நீரின் தண்மையும் பூங்காற்றின் இனிமையும் அவளைப் பரவசப் படுத்தின. அவளுடைய வாயிலிருந்து லேசாகப் பாட்டு கிளம்பித் தன்னைமறந்து அவள் பாடிக் கொண்டிருந்தாள். அங்குசத்திற்கும் மாவுத்தனுக்கும் கட்டுப்படாத யானை அந்த இன்னிசைக்கு மயங்கி விட்டது. ஆம்! தன்னையும்கூட அது மறந்துவிட்டது. அப்பொழுது தான் முறித்த தினைக்கதிர் பாதி மென்றதும் மெல்லாததுமாய்த் துதிக்கையில் அப்படியே கிடக்கத் தன் பெரும் பசியையும் மறந்து அந்தத் தெய்வீக இசையமுதைப் பருகிக்கொண்டிருந்தது யானை!

இந்த அற்புதச் சித்திரத்தைத் தீட்டுகிறது அகநானூறுச் செய்யுள் ஒன்று. ஆறறிவுபடைத்த மனிதனே யன்றி ஜீவராசிகள் அனைத்தையுமே கட்டுப்படுத்தி வசீகரிக்கும் சக்தி சங்கீதத்திற்கு உண்டு என்பதைத் தெரியப்படுத்துகிறது.

நளகிரி என்கிற மதம்பிடித்த யானையை வீணை வாசித்தே உதயணன் அடக்கியதாகப் பெருங்கதையென்றொரு தமிழ்நூல் கூறுகிறது. அன்று கோகுலத்தில் கண்ணன் தன்னுடைய குமுதச் செவ்வாயில் வேய்ங்குழலை வைத்து வடித்த இன்னிசை கேட்டுத் திரண்டுவந்த

ஆவினங்களைப் பற்றியும் அந்தக் குழலிசையில் நெஞ்சைப் பறி கொடுத்த கோபியரைப் பற்றியும் தெரியாதவர்கள் யார்?

இன்றைக்கும் நாம் பார்க்கிறோம் பாம்புப்பிடாரன் மகுடியை வாயில் வைத்து ஊத ஆரம்பித்தவுடன் அந்த இசையில் மயங்கிக் களிவெறி கொண்டு ஆடுகிறது பைந்நாகம். அன்னை இசைக்கும் சங்கீதத்தில் இளங் குழவி தன்னையும் மறந்து தூங்குவது நாம் தினம் காணும் காட்சிதான்.

பூங்காவில் ரீங்காரமிடும் வண்டின் இன்னிசை கேட்டு மலர் தன் இதழ்களை அகலத் திறந்து அதை வரவேற்கிறது, "முல்லைவரிவண்டுதே வாய் நேசிழ்ந்தனவே" என்கிறது குறுந்தொகை.

இறைவனே இசைவடிவானவ ரென்றும் இசையினால் வசீகரிக்கப் படுவர் என்றும் தேவார திருவாச கங்கள் கூறுகின்றன.

இறைவன் மட்டுமல்ல. இயற்கையும் இசை மயந்தான். வெள்ளலைக் கரங்கொட்டி ஆர்க்கும் நீலக்கடலின் பிரணவ கோஷத்திற்கும், மாவின் இளந்தளிர்களைக் கோதி விட்டு வஸந்தத்தின் வரவை அறிவிக்கும் கருங்குயிலின் 'குக்கூ' வெனுமிசைக்கும், இலைகளை அசைத்துக்கொண்டு மரக்கிளைகளினூடே தவழ்ந்துவரும் தென்றலின் இன்னிசைக்கும் நெஞ்சைப் பறி கொடுக்காதவர்கள் யார்? இதனால் தான் "சங்கீதத்திற்கு மயங்காத மனிதனை நம்பாதே. அவன் பஞ்சமா பாதகங்களையும் செய்யத் துணிவான் என்றார் ஆங்கிலக் கவி ஷேக்ஸ்பியர்.

இசையின் மூலம்தான் இறைவனை அடையமுடியும் என்றார் மஹாகவி ரவீந்திரர்.

சங்கீதம், கேட்பவனுக்குமட்டு மல்ல; பாடுபவனுக்கும் மகிழ்ச்சி யூட்டுகிறது. குடும்பத் தொல்லைகளையும், மனத் துயரங்களையும் மறக்கச் செய்து மாயப்பிரபஞ்சத்தை ஊடுருவி இறுதியற்ற பரம்பொருளுக்கு அருகாமையில் நம்மைக் கொண்டுசேர்க்கிறது. இதனால்தான் கடவுள் வழிபாட்டிற்குத் தெய்வத் தன்மை பொருந்திய சங்கீதத்தையே சிறந்த கருவியாகக் கொண்டனர் நம் முன்னோர். சங்கீதத்தைத் தேவ பாஷையென்று சொல்வது கொஞ்சமும் மிகையல்ல.

3

ஸ்ரீமதி. ஜெ. ராதாபாய்

கானம் கேட்டு இன்பம் அடையாத உயிர் இல்லை, பாம்பும், பறவையும், பசுவும், சிசுவும் கானத்தை விரும்பும். பிடாரன் மகிடியை ஊதும்போது, நாகம் படம் விரித்து ஆடுவதை நாம் காண்கிறோம். இளங் குழவியும் விரும்பும் இனிய விருந்து சங்கீதம். 'ஆராரோ' என்னும் பாடல் கேட்டு குழந்தைகள் அழுகையை நிறுத்தி நித்திரை கொள்ளும். ஆயனது குழலோசை கேட்டு ஆவினங்கள் மேய்கையைவிட்டுத் தலைதூக்கி நிற்கும், பாலும் சுரக்கும். 'பாடிக் கறக்கும் மாட்டை பாடிக் கற' என்ற பழமொழியும் உண்டு. பெண்களின் பாடல் கேட்டு குருக்கத்தி மலரும் என்பர்.

உழைப்பாளிகள் உழைக்கும் போது சங்கீதத்தின் இனிமையே அவர்களின் களைப்பை நீக்கி ஊக்கந் தருவதை - ஏற்றம் இறைப் போரும், நிலம் உழுவோரும், சுண்ணம்பு இடிப்போரும், நெல் குத்துவோரும், சுமை தூக்குவோரும் பாடிக்கொண்டே தத்தம் வேலைகளைச் செய்யும்போதுகாண்கிறோம்.

சங்கீதத்தின் இனிமையே அவர்கள் களைப்படைந்து சோர்ந்துவிடாமல் மேலும் உற்சாகத்தோடு வேலை செய்வதற்கு தூண்டுகோலாய் இருக்கிறது எனக் கூறவும் வேண்டுமா!

மனம் அமைதியை இழந்து சஞ்சலமுற்றிருக்கையில் இனிமையான சங்கீதம் மனதைப் பரவசப்படுத்தி சந்தோஷத்தையும் சந்துஷ்டியையும் அளிக்கின்றது. துன்பத்தை மறக்கச் செய்து கவலையை ஒழிக்கும் சமய சஞ்சீவி சங்கீதமே!

ஜலமானது எப்படி அது இருக்கும் பாத்திரத்தின் உருவத்தை அடைகின்றதோ, அதுபோலவே சங்கீதமும் எந்த பாவத்துடன் பாடப்படுகின்றதோ, அதே பாவத்தையும், உணர்ச்சியையும் கேட்போர் உள்ளத்திலுண்டாக்குகின்றது. சோகம் நிறைந்த பாட்டைக் கேட்கும்போது, நமது மனமும் கனிந்து உருகுகின்றது. பாடுபவரின் உள்ளத்தோடு நமது உள்ளமும் ஒன்றாகக் கலந்துவிடுகின்றது. இன்பப் பாடலைக் கேட்டு, நாமும் இன்பவாரிதியில் திளைக்கிறோம். மனிதனுக்குள்ள உயர்ந்த ஆற்றல் பாட்டு. இசைப் பாட்டால் ஒரு நாட்டையே விழிப்பிக்கலாம், உய்விக்கலாம்.

அமரகவிகளெனத் திகழும் தாகூரின் பாடல்களையும் பாரதியாரின் கவிதா ரத்தினங்களையும் பாடுந்தோறும், கேட்குந்தோறும் நமக்கு அளவிலா ஆர்வம் உண்டாகிறது. தேச பக்தி, தெய்வபக்தி தாய்மொழிப் பற்று, வீரம், கடமை முதலிய அரிய குண குணங்களும் தோன்றுகின்றன.

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரின் உள்ளத்தை அள்ளும் பாடல்களை அறியாதவர்கள் இருக்கமாட்டார்கள். அவரது ஒவ்வொரு பாட்டும் கலைவெறியை ஊட்டுவதாய் இருக்கின்றது. 'கவிக் கனவுகள்' என்ற கவிமலர் மாலையை—தமிழ் மணம் கமிழும் அவ்வரிய கவிதையில் அடங்கியுள்ள பாடல்களை — எத்தனைமுறை பாடிச்சுவைத்தாலும் தெவிட்டாது. மேலும் படிக்கவேண்டும் என்னும் ஆர்வமே உண்டாகும் என்பது திண்ணம். ஆனந்தமே உருவாகிய கற்பனை உலகிற்கு நம்மை இழுத்துச் சென்று தெவிட்டாத இன்பத்தைச் சொரியும் சக்தி, சங்கீதத்திற்குத்தான் உண்டு என்று திட்டமாகக் கூறலாம்.

உள்ள உணர்ச்சிகளை அப்படியே படம் பிடித்துக் காட்டுவது பாட்டு. காலஞ்சென்ற அன்னை கஸ்தூரி பாயின் பிரிவாற்றாமையை உணர்த்தும் உருக்கமான பாடல்கள் எத்தனை கிளம்பி இருக்கின்றன! நெஞ்சை அழுத்தும் சோகத்தை எதிரொலிக்கச் செய்யக்கூடிய சாதனம் சங்கீதமே அன்றோ?

பாட்டோசை கேட்கும் இடத்திற்கு நம்மை அறியாமலே நமது கால்கள் இழுத்துச்செல்லுகின்றன. நேரம்போவதே தெரியாமல் அவ்விடத்திலேயே நிலைத்துவிடச் செய்யும் சங்கீதத்தின் அற்புத சக்தியை என்னென்று சொல்வது! தெருவில் பிச்சைக்காரர்கள் பாடிக்கொண்டே வருகிறார்கள். அவர்கள் பாட்டு நம்மை வசீகரித்துவிடுகிறது. மேலும் பாடச்சொல்லி கேட்கிறோம் சந்தோஷ மிகுதியால் பின்னும் ஒரு காலணா போட்டு அனுப்புகின்றோம். பாட்டுமுடிந்த பல மணி நேரத்திற்கு பின்பும் அந்த இன்னொலி செவிகளில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றது!

'செல்வத்துள் செல்வம்
செவிச் செல்வம்
அச்செல்வம் செல்வத்துள்
எல்லாந் தலை'

என்ற வள்ளுவரின் வாக்கியம் சங்கீதத்திற்கு எவ்வளவு பொருத்தமாக இருக்கின்றது! சங்கீதம் எவ்வெவருக்கும் இடங்கொடுக்கும் கலாசமுத்திரம்—ஆனந்த சாகரம். அரசன் முதல் ஆண்டிவரை உள்ள சகல ஜீவராசிகளும் அனுபவித்து இன்பம் கொள்ளக்கூடியஜாதிமதவேறுபாட்டின்றி யாவரும் பெறுதற்குரிய நிதி.

சிறுவர் சிறுமிகளுக்கும் பாட்டென்றால் உயிர். எந்நேரமும் எதையாவது பாடிக்கொண்டே இருப்பார்கள். சங்கீதத்தின் கவர்ச்சி தரும் சக்தியை உணர்ந்தே தற்காலம் பாடசாலைகளில், எந்த விஷயத்தையும் பாட்டின்மூலம் போதிக்கச்செய்கின்றனர். பிள்ளைகளும் பாட்டின் மூலம் எளிதாகக் கற்றுக்கொள்கின்றனர். கும்மி, கோலாட்டம், நடனம், செய்கைப்பாட்டு இவைகள் பாலர்களுக்கு அளவிலா குதூகலத்தை அளிக்கின்றன.

கலியாணம் முதலிய நற்காரியங்கள் நடக்கையிலும், சங்கீத வாத்திய முழக்கங்கள்தான் முக்ய அறிகுறியாகக் காணப்படுகின்றன. ஆகவே காந்தம்போல் கேட்போர் உள்ளத்தைத் தன்பால் இழுத்துக்கொள்ளும் சக்தி சங்கீதத்திற்கு உண்டு என்பது தெளிவாகிறது.

கானத்தால் நோய் நீங்கும். பயித்தியமும் ஒழியும் என்பர். சமீபத்தில் அம்மையார் ஒருவருக்கு ஆபரேஷன்போது மயக்க மருந்து கொடுத்திருந்தனர். குறித்தநேரம் கழிந்தும் அவர்களுக்கு சுய நினைவு உண்டாகவில்லை. டாக்டர்கள் கலக்கமடைந்து பலவாறு யோசித்து, முடிவில் அவர்களில் ஒருவரே அருகில் உட்கார்ந்து இனிய இராகங்கள் சிலவற்றை வீணையில் வாசித்தனர். சுமார் பதினைந்து நிமிடங்களுக்குப் பின் அவர்களுக்கு நினைவுஉண்டாயிற்று. அதைப்பற்றி அவர்களே கூறியதாவது:—"அந்த இனிய ஓசையை நான் முதலில் கேட்டபோது, எங்கோ பாதாளத்தில் இருப்பது போல் உணர்ந்தேன். பின் ஏதோ ஒன்று என்னை சிறிது சிறிதாக மேலுக்குக் கொண்டுவருவதுபோல் தோன்றியது. ஓசை தெளிவாகக் கேட்டபோது நான் நினைவு பெற்று இருப்பதை உணர்ந்தேன்."

'வானக்குயில், 'கஸ்தூரிதிலகம்,' 'மதுர கீதம்,' 'இதய ஒலி' முதலிய நவீனங்களிலும் இந்த உண்மை எவ்வளவு அழகாக சித்திரிக்கப்பட்டுள்ளதென்பதுநேயர்கள்அறிந்ததே.

மொகலாய மன்னரான அக்பர் சக்ரவர்த்தியின் சபையில் திலகம் போல் விளங்கிய தான்ஸேனுடைய பாட்டு வன்மையால், நோய்வாய்ப்பட்டு மரணவாயிலில் இருந்த சக்ரவர்த்தியின் புதல்வி நோய் நீங்கி உயிர்பெற்றெழுந்தாளென்றும் சரித்திரம் கூறுகிறது!

மக்களை உயிர்ப்பித்து உவகையுடன்வாழச்செய்யும்மந்திரசக்தி— அதியற்புத தெய்வீக சக்தி—சங்கீதத்திற்கு உண்டு என்பது மேற்கூறிய உதாரணங்களினால் விளங்குகிறதல்லவா!

ஆழ்வார்களும், நாயன்மார்களும் தம்முள்ளத்தே தோன்றிய பக்திப் பரவசத்தை, கரைகாணாக் காதலை பாக்கள் மூலமாகவன்றோ வெளியிட்டுள்ளனர்!

---

அடுத்த கட்டுரைப் போட்டிக்கு அளிக்கப்பட்டுள்ள விஷயம்:—

## நாம் கட்டுப்பட வேண்டியது

# மனச்சாட்சிக்கா?—உலகத்தோருக்கா?

## 15

குழந்தை பிறந்ததென்றாலே தாங்கவியலாத சந்தோஷமும் ஒரு பெருமிதமும் உண்டாவது உலக வியல்பு. அதிலும் ஆண்குழந்தையே பிறந்துவிட்டதென்றால் அந்த ஓர் தனித்த ஆனந்தத்திற்கு அளவு கூற முடியுமா? எத்தனைதான் விலக்க முயன்றாலும் ஆண்குழந்தை பிறந்த சந்தோஷம் ஸாமிநாதனின் இதயக் கடலில் அலைமோதியது. அவன் தனக்கு ஆண்குழந்தையே பிறக்க வேண்டுமென்றுதான் இரவு பகல் ப்ரார்த்தனைசெய்தான். அதேமாதிரி பிறந்ததைக் கேட்டு எப்படி சந்தோஷப்படாதிருக்க முடியும்? எல்லோரையும்விட அகிலாபாயின் ஆனந்தந்தான் கரைகடந்தது. 'ஆனந்தம்! ஆனந்தம்! ப்ரம்மானந்தம்!" என்று வாய்விட்டுக் கூறி குதிக்காததுதான் தாமதம்.

அமராபாயின் தாயாருக்கும் ஸரஸாவுக்கு பிள்ளைக் குழந்தையாய் பிறந்ததுபற்றி பரம ஸந்தோஷம் உண்டாகியதால் அந்தம்மாள் குழந்தையும் தாயும் க்ஷேமமாய், மங்களகரமாயிருக்க வேண்டுமென்று பகவானை ப்ரார்த்தித்தாள்.

அமராபாய் வீட்டிற்கு வந்ததும் உடனே அவளிடம் இந்த சந்தோஷச் செய்தியைத் தெரிவித்ததும் அவளும் மகிழ்ச்சியுற்று "பிள்ளையா!" என்று ஆவலுடன் கேட்டாள். ஸரஸா தாயானதை எண்ணி அவள் உள்ளம் பூரித்தது.

அந்த ஆனந்த உணர்ச்சியில் தானும் தாயாகும் காலம் வருமா! தனக்கும் ஒரு குழந்தை பிறக்குமா என்று தோன்றியது. அத் தோற்றத்தின் வேகம் கல்யாணத்தை விரும்பி ஏதேதோ கனவு உலகத்தில் சஞ்சரிக்கச்செய்தது. அந்த நினைவே அவளுடைய உள்ளத்தில் ஓர் தனித்த சிறப்புடைய ஆனந்தத்தை உண்டாக்கியது. தானும் ஏன் உலகத்தவரைப்போல் விவாகம் செய்துகொள்ளக்கூடாது? என்று தோன்றும்போது சற்று வெட்கமும் ஏக்கமும் பாதித்தன. ஆனால் அந்த நினைப்பு அதிகநேரம் நிற்கவில்லை. அடுத்த நிமிடமே அவைகள் எங்கோ பறந்தன. அகிலாபாயிடம் சந்தோஷம் விசாரிப்பதற்காக வந்தாள்.

முன்னதிகாரத்தில் தெரிவித்தபடி அகிலாவின் கைகளையும் கன்னங்களையும் கண்டு அசையாத நெஞ்சமே அசைந்துகொடுத்த வேகத்தில் ஒரு க்ஷணம்பார்த்தான். அண்ணன் தன்னை கவனிப்பதை அறிந்த அகிலாபாயிக்கு அவனையறியாது துக்கம் பீறிக்கொண்டு வந்ததால் கண்ணீர் வழிய சடக்கென்று உள்ளே போய்விட்டாள்.

தான் அடித்ததும் கையை முறித்ததும் இத்தனை கடுமையாகவா ஆய் விட்டது என்று நினைக்கும்போது அவனை ஏதோ செய்தது. அகிலாவிடம் சென்று அனுதாப வார்த்தைகள் சொல்லலாமா என்றுகூட நினைத்தான். ஆனால் எதனாலோ அந்த எண்ணம் உடனே மாறி பழய ஆத்திரம் தலை தூக்குவதற்குள் அமராபாய் அங்கு வருவதைக் கண்டதும் கோபமும் ஆத்திரமும் பன்மடங்காகப் பெருகின.

அந்த வேகத்தில் அமராபாய் ஒரு படித்த மனுஷி என்றோ பெரிய மனிதர்வீட்டுப் பெண் என்றோ பார்க்காமல் முரட்டுத்தனமும் மூட புத்தியும் கொண்டு "இனி தயவு செய்து இங்கு வரவேண்டியதில்லை. அவசியமான ரஸாபாஸத்தை நான் விரும்பாததால் மரியாதையாகச் சொல்கிறேன். போய்விடலாம்" என்று மிகவும் கடுமையான குரலில் கூறியவாறு வீதிக்கதவை

தடாரென்று தாளிட்டுக்கொண்டு உள்ளே சென்றான்.

இச் செய்கையைக்கண்ட அமராபாயின் இதயம் துணுக்குற்றது. அவள் கனவிலும் எதிர்பாராவிதம் நேர்ந்த இந்த அவமானத்தினால் அவள் தேகமே குன்றி எங்குமில்லாத துக்கம் பிறிக்கொண்டு வந்ததால் அடக்கமுடியாது புலம்பிக் கொண்டே போய்விட்டாள்.

"இத்தகைய அலக்ஷியத்திற்கும் உதாசீனத்திற்கும் யாது காரணமிருக்கும்?" என்று அவளால் கண்டறியமுடியவில்லை. "எனக்கே இத்தனை தண்டனையானால் அகிலாபாயிக்கு என்ன நேர்ந்திருக்குமோ! தெரியவில்லையே! ஒருவேளை நாம் அவளுடைய கைவேலைகளை கண்காட்சிச் சாலையில் வைத்ததற்காக இந்த காட்டுப்புறம் கோபித்துக் கொண்டிருக்குமோ!" என்ற சந்தேகம் உதித்தது.

உடனே அதுவாகத்தானிருக்க வேண்டும் என்று தீர்மானமாகத் தெரிந்ததால் அவள் நினைவு முற்றும் அந்தப் பரதேசிப் பெண்ணிடமே சென்று சுழன்றது. மூர்க்க குணம் படைத்த ஸாமிநாதனின் ஆத்திரத்தின் எல்லை அவளுக்கும் தெரியுமாதலால் மனது தவித்தது. வீட்டுப்படி ஏறியவளைப் போய்விடும்படி கூறிக் கதவைத் தாளிட்ட பிறகு அந்த மனிதனின் முகத்தில் விழித்துக்கொண்டு மறுபடியும் போக மனது வரவில்லை.

குழம்பித் தவித்தவாறு மாடிக்கு ஓடினாள். அகிலா வீட்டிலிருப்பதாகவே சந்தடி தெரியவில்லை. உரத்துக் கூப்பிட்டால் அந்த பாவி இங்கும் வந்து என்ன சொல்வானோ என்கிற அச்சத்தால் கூண்டிலடைபட்டக் கிளிபோல் அங்குமிங்கும் எட்டிப் பார்த்தாள். ஒருவிதமான சந்தடியும் தெரியவில்லை. கண்காட்சியின் வேலை ஏராளமாயிருப்பதால் அதற்குமேல் கவனிக்க முடியாது போயிற்று. அந்த மதியீனனின் கண்முன்பு இனி தான் போவதில்லை என்றுமட்டும் நிச்சயித்துக் கொண்டாள்.

அகிலாபாயிடம் அவள் வைத்துள்ள ப்ரீதியின் வேகத்தில் அவளை எப்படியாவது பார்த்துவிட்டு வர வேண்டுமென்று தடுக்கமுடியாத வாஞ்சை பாதித்ததால் ஸாமிநாதன் செய்த அலக்ஷியத்தைக் கூறாமல் தனக்கு வேலையிருப்பதால் தன் தாயை அனுப்பி பார்த்துவிட்டு வர வேண்டுமென்று எண்ணித் தாயாரிடம் மெல்ல விஷயத்தைக் கூறினாள். அந்தம்மாளும் அவ்வாறே கிளம்பினார்கள்.

அகிலாவின் வீட்டிற்கு வந்து பார்க்கையில் கதவு பூட்டியிருந்தது கண்டு சற்று அஞ்சினாள். பூட்டை நன்றாக அசைத்துப் பார்த்தாள். ஒருவேளை குழந்தையை பார்ப்பதற்காக இருவரும் ஊருக்குச் சென்றிருக்கலாமோ என்று தோன்றியதால் பேசாமல் போய்விட்டாள். இந்த விஷயத்தைக் கேட்ட அமராவுக்கு மட்டும் மனது சாந்தியடையாமல் ஏதோ செய்தது.

## 16

ஸாமிநாதனின் ராக்ஷஸ குணத்தின் எல்லை மீறியதால் அமராபாயை அலக்ஷியப்படுத்தி அனுப்பிவிட்டு உள்ளே போனான். அகிலாவுக்கு அதுவரையில் சற்று ப்ரயாஸைப்பட்டுப் பொறுத்தும் பானதை தாங்காமல் உயிர் துடிக்க வாரம்பித்தது. கையை இப்படி அப்படி அசைக்க முடியாது தத்தளித்தவாறு தனக்குள் கதறிக் கொண்டிருந்து அப்படியே மயங்கி விட்டாள்.

அச்சமயம் அடுத்த வீட்டிலிருந்து அமுதகீதத்தின் நாதம் செவியில் பட்டவுடனே பட்டமரமும் பால் வடிக்கும் என்பதுபோல் அவளது துடிதுடிக்கும் நிலைமையிலும் ஒரு கடுகளவு ஆனந்தம் உண்டாகியது. அவள் நாத ப்ரம்மத்தின் வசீகர சக்திக்குக் கட்டுப்பட்டு தனது இதயத்தைப் பறிகொடுத்தாளேயன்றி பாடுகிற மனிதனைப்பற்றி அவள் உள்ளம் ஒரு கடுகளவுகூட நினைக்கவில்லை. இந்த சத்யம் பகவானுக்குத்தான் அர்ப்பணம்.

கான மழையைப் பொழியும் அந்த மனிதனை அவள், "சாக்ஷாத் தெய்வமோ ஸரஸ்வதியே ஆணுருவில் வந்திருக்கிறளோ அன்றி 'கந்தர்வ கானம் நாரதகானம் ஆஞ்சனேயரின் அபூர்வ ராமாமிருத கானம்' என்றெல்லாம் சொல்கிறர்களே, அப்படிப்பட்ட அம்சத்தில் சேர்ந்தவராகவிருக்குமோ?" என்றெல்லாம் எண்ணி உள்ளத்தில் உவகைகொண்டாளேயன்றிகேவலமான மனித சுபாவத்தின் பிற்போக்கான கீழ்தர எண்ணத்திற்கு அவள் சற்றும் இடங்கொடுக்கவில்லை. அத்தகைய எண்ணம் உண்டாகவும் இல்லை.

அன்றும் அந்த அபூர்வகானம் கேட்டவுடனே தன்னுடைய பாதையையும் மறந்து தட்டுத் தடுமாறி மாடிக்குச் சென்றள். அவளுடைய நோயிக்கு இச்சங்கீதம் அவுஷதமாகவே தோன்றியது. அந்த அபாக்யவதிக்கு அந்த அந்தகனிடத்தில் ஐயோ பாவம்! என்கிற பச்சாத்தாபமும் கருணையும் அந்தகன் என்கிற மனக்கனிவும் அலாதி பரிதாபமும் எங்கிருந்தோ சுரந்தன.

அந்த சமயத்திற்கு ஏற்றதாயும் அவள் மனத் தவிப்புக்கு ஆறுதல் கூறுவதுபோலும். "தொலிநே ஜேஸின பூஜாபலமு" என்கிற கீர்த்தனையை அந்தகன் பாடும்போது அவள் மனது கரைந்து கண்களால் உருகியோடியது. தடுக்க முடியாத மனவெழுச்சிக்கு மத்தியில் தாங்க முடியாத நோயுடன் தவித்து நின்றபடியே பதுமைபோலானுள்.

அமராபாயை அலக்ஷியப்படுத்தி அனுப்பிய பிறகு ஸாமிநாதன் நேரே உள்ளே வந்தான். அகிலாவைப் பார்த்து மன்னிப்புக் கேட்கலாமா! ...கேளு ...கேளு... என்று ஒருபுறம் மனத்தில் ஏதோ கூறுகிறது. "ஒரு பெட்டைக் கழுதைக்கு இத்தனை தைரியமா! எனக்குத் தெரியாமல் இவள் திருட்டுத்தனமாய் இத்தனை காரியம் செய்திருப்பதோடு ஆங்கிலமும் கற்றுவிட்டாள் என்றல் இவள் வேறு எதற்குத்தான் துணியமாட்டாள்? அதிகப் படிப்பினுல் அதிகமான புத்தி விசாலித்து அறிவுக்குன்ருக ஆவார்கள் என்பது பெரியவர்களின் எண்ணம். சில இடங்களில் அதிகப்படிப்பால் அனர்த்தந்தான் விளைகின்றது, அமராபாயின் ஸ்நேகத்தால் இக்கதி உண்டாகியதேயன்றி இவர்களாக அதிக ப்ரஸங்கித்தனம் செய்திருக்கமுடியாது. ...தொன்று தொட்டு இதே வீட்டில் நாம் குடியிருந்து வந்தும் இந்த புண்யவதியினுல் வீட்டை காலி செய்யவேண்டும்போலிருக்கிறது.... இல்லாவிடின் வேறு வழியில்லை.

என்... எத்தனை காலத்திற்குத்தான் நான் இந்த பீடையை வைத்துக்கொண்டு மாரடிப்பது? இவள் கணவன் விஷயமும் தெரியவில்லை. மாமியார் வீட்டினர் என்று சொல்லிக்கொள்வதற்குக் கூட ஒரு சனியன்களையும் நமக்குத் தெரியவில்லை. இவளை என்னதான் செய்யமுடியும்? எத்தனையோ ப்ரயத்தனம் செய்தும் அந்த மனிதனின் தகவலே கண்டு

18309

பிடிக்க முடியவில்லை. இந்த கஷ்ட காலத்திற்கு என்ன செய்வேன்?" என்று தன் போக்காக ஏதேதோ யோசித்தபடியே சற்றுஉலாவினன்,

உள்ளே எட்டிப் பார்த்தான். அகிலா புழுவெனத் துடித்துப் புரள் வதைக் கண்ணுரக் காணும்போது மட்டும் ஏதோ ஒன்று சற்று மனத் தைத் தளரச் செய்தது. அடுத்த விநாடியே தனது அவமானத்தை எண்ணி மகா கோபமடைந்து சடக் கென்று வெளியே போனுன்.

தன் போக்காகக் கதறிய பிறகு நாம் முன்பு தெரிவித்ததுபோல் அகிலா, மாடியில் சங்கீதத்திற்கு அடிமையாகி நிற்கும் சமயம் ஸாமி நாதன் மீண்டும் வீட்டிற்குவந்தான். உள்ளே எட்டிப்பார்த்தான். அகிலா வைக் காணுததால் சற்று அச்சத் துடன் உள் முற்றிலும் பார்த்தான். காணுததால் மாடிக்குச் சென்றுன்.

மெய்மறந்து கண்களை மூடியிருந் தும் தாரைதாரையாகக் கொட்டும் ஆனந்தபாஷ்பத்துடன் சமாதி நிலை யில் நிற்கும் அகிலாவைப் பார்த்த தும் அவனுடைய எரியும் ஆத்திரத் தீயில் ஒரு புட்டி மண்ணெண் ணெயை ஊற்றியதுபோல் குபீ ரென்று பற்றிக்கொண்டது.

ஒரு விநாடிக்குள் விபரீதமான எண்ணங்கள் புசல் காற்றுபோல் குபீர் குபீர் என்று சுற்றி அடித்து அவனை அல்லகல்லோலப் படுத்தி விட்டதால் "அஹ்ஹா! அப்படியா சமாச்சாரம்! ஏதோ ஜாலவித்தை களைமட்டும்தான் அந்த விபசாரி யிடம்கற்றுய்என்று எண்ணினேன். இதையும் கற்றுவிட்டாயா! பக்கத்து வீடுதான் ஓர் தாசிவீடாகிவிட்டதால் உன் பாடும் யோகமாகிவிட்டதுபோ லிருக்கிறது, இந்த ப்ரவர்த்தகமும் உண்டாகிவிட்டதா! ஏன் இந்த மொட்டை மாடியில் நின்று தவம் செய்துக் கதறவேண்டும்? நேரா கவே போய்விட்டால் எனக்குப் பரம சந்தோஷமாயும் இருக்கும். போ: போ. அந்த அந்தகனைத் தேடிக் கொண்டு போ! தர்ம மார்க்கத்தை விட்டு ஞானக் கண் அவிந்து திரியும் உனக்கு ஓர் அந்தகனின் நட்பைத் தவிர வேறு உண்டாக நியாயமில்லை. சரியான ஜோடி! சபாஷ்: அந்த குருடனும் இனிமேல் மொண்டியாகிய நீயும் தெருவில் தட்டுப் பிச்சை எடுத்துக்கொண்டே போனுல் அவன் பாட்டிற்கும்உனது தாளத்திற்கும் சரியாக காலக்ஷேபம் செய்ய காசுகிடைக்கும். போய்விடு" என்று ஆவேசத்துடன் கூறியவாறு இதுகாறும் செய்த சித்திரவதை போதாமல் கன்னத்தில் பளார் என்று அறைமீது அறை அறைந்து தடதடவென்று கீழே இழுத்துக் கொண்டுவந்து ஒரு அறையில் அவளைப் போட்டுப் பூட்டிவிட்டு வீதிக் கதவையும் பலமான பூட்டினுல் பூட் டிக்கொண்டு போய்விட்டான்.

இந்த சமயந்தான் அமராபாயின் தாயார் வந்து பார்த்துவிட்டு, ஒரு வேளை குழந்தையைப்பார்க்கத்தான் போயிருப்பார்கள் என்று தானு கத் தீர்மானித்துக் கொண்டாள். உண்மை யாருக்குத் தெரியும்? எல்லாம் பூடகமாகவே இருந்தது.

## 17

குழந்தை பிறந்த சந்தோஷத்தைக் கேட்டவுடனே தனது கணவனும் நாத்தியும் ஓடோடியும் வருவார்கள் என்று ஸரஸா நிமிஷத்திற்கு நிமி ஷம் எதிர்பார்த்துப் பேரானந்தத் துடனிருந்தாள், சந்தோஷத்தை அறிவிக்க ஆள்தான் வரவில்லை என் ருல் ஒரு கடிதங்கூட வராதுபோன தால் அதே மனக்கவலையாக மாறி 'என்ன காரணத்தினுல் வரவில்

லேயோ தெரியவில்லையே!' என்று திகில் உண்டாகிவிட்டது.

அவள் தகப்பனரிடம் கூறிப் பல கடிதங்கள் போட்டும் பலனில்லை. நேரே ஒரு ஆளையனுப்பிப் பார்த்த தில், அவர்கள் அந்த வீட்டிலேயே இல்லை என்றும் வேறு ஏதோ பேட்டையில் இடம்மாறிவிட்டதாக வும் தகவலைக் கேட்டு ஸரஸாவின் உயிர் ஊசலாடியது, "எத்தகைய ப்ரளயம் வந்தாலும் வீட்டைவிட்டு அசையாமல் அதே பொத்தை வீட் டில் ஒட்டிக்கொண்டிருக்கும் மனிதர் எக்காரணத்தினுல் ஒருவிதமான தக வலும் இல்லாமல் காலி செய்ய வேண்டும்? கடிதங்கூட எழுதாது, தன் குழந்தையைத் தான் வந்து பார்க்கவும் மனம் ஆவலுருது ஏன் இத்தகைய மவுனம் சாதிக்கவேண் டும்?" என்று பலவிதமான அதிர்ச்சி உண்டாகி அவளைத் தாக்கிவிட்ட தால் தானே தன் கையினுல் கணவ னுக்கும் நாத்தனுருக்கும் கடிதமெழு தினுள். புது விலாஸம் தெரிந்தால் தானே! திரும்பி வந்துவிட்டது.

திடீரென்று உண்டான இந்தவிப ரீதத்தைத் தாங்கமாட்டாது தவிக்கும் ஸரஸா, தன் கணவனின் பாட சாலைக்கு நேராக ஆள் அனுப்பி விசாரித்தாள். ஸாமிநாதன் சேர்ந்தார்ப்போல் இரண்டு மாத லீவில் இருப்பதால் தகவல் ஒன்றும் தெரியாதென்ற பதில் கிடைத்தது.

என்ன செய்வாள் பாவம்! புண் ணியாவாசன தினமும் வந்தது. ஸரஸாவின் மனோராஜ்யத்தில் எழும் பிய கற்பனைக்கோட்டை அப்படியே இடிந்து பொடிசூரணமாகிவிட்டது. 'அமராபாயை விசாரித்தால் தகவல் தெரியலாமோ!' என்று ஒருயோசனை தோன்றியதால் அமராவுக்குக் கடித மெழுதினுள். அதற்குப் பின் வரு மாறு பதில் வந்தது.

" அன்புள்ள ஸரஸா!

உலகத்தில் கோடிக்கணக்கான வித்யாஸப்பிறவிகளும் குணங்களும் இருப்பதாகக் கேள்வி. ஆனல் உன் கணவனைப்போன்ற முட்டாள், மூர்க்கன், கண்மூடித் தனமான சுபாவமுடையமடையனைநான் கண் டதும் கேட்டதுமில்லை: தேனும் பா லும் போல் வாழ்க்கை நடத்திவந்த உங்கள் குடும்பத்தைச் சிதறவடிக்க நான் ஒரு விஷப்பூச்சியாக ஏற்படு வேன் என்கிற எண்ணமாவது சற்றுதெரிந்திருக்கும்பக்ஷத்தில்நான் உங்களிடம் இத்தகைய சினேகமே செய்திருக்கமாட்டேன். ஏதோ ஆத் மார்த்தகமான அன்பு உண்டான தாலும் அகிலாவின் பரிதாபத்தைக் கண்டு சகிக்கமுடியாது பச்சாத்தா பமும் அன்பும் சுரந்ததாலும் நான் உங்கள் நன்மையைக்கோரி செய்த உபகாரம் கண்மூடி கபோதியான உன் கணவனுக்குப் பரமசத்ருவாக அமைந்துவிட்டது.

(நடந்த விவரங்களை எழுதி) 'இப் படியும் ஒரு ஜடஸ்வபாவம் உலகில் இருக்குமா!' என்று என் மனது வியந்து தவிக்கிறது. இரண்டு நாட் கள் வீடு பூட்டப்பட்டிருந்ததன் ரக ஸியமே எனக்கு விளங்காத மூடு மந்திரமாயிருந்தது. பிறகு எனது சினேகிதையொருத்தி லேடி டாக்ட ராக இருக்கிருள். அவள் மூலம் அகிலாவுக்கு ஜன்னிகண்டு ஆஸ் பத்திரியில் இருப்பதாயும் வேண்டு மென்றே அடித்த அடியினுல் உண் டாகிய ரண ஜன்னி என்றும் அபாயகரமாயிருப்பதாயும் சதா 'அமரா! அமரா!' என்று வாய்ப் பிதற்றுவதாயும் கூறக் கேட்ட பிறகுதான் விஷயம் ஒருவாறு விளங்கியது.

தனது ஓய்வுநேரத்தை வீணுக்கா மல் இருக்கவும், சமயம் நேர்ந்தால்

பிழைப்புக்கும் ஆதாரமாயிருக்கும் என்ற நல்ல நோக்கத்துடனும் உங்களிருவருக்கும் கற்றுக்கொடுத்த கைவேலையே இத்தகைய வைரியாகும் என்று யாராவது கனவுதான் காண முடியுமா! கதைகளில்கூட இத்தகைய அல்ப விஷயத்திற்கு இம்மாதிரி கொடுமை செய்தார்கள் என்று நான் படித்ததில்லை. மூர்க்க குணம் படைத்த எத்தனையோ பேர்களை நான் பார்த்திருக்கிறேன். கேவலம் கோபம், பாபம், சண்டாளம் என்கிறதை தத்ரூபமாகக் காட்டிவிட்ட உன் கணவனைப் போன்ற அடிமுட்டாள் உலகிலேயே இல்லை என்று நான் திட்டமாகக் கூறுவேன். உனக்குக் கோபம் வந்தாலும் வரட்டும்.

இப்படியா கொலை செய்யவும் துணிவது? இத்தனை வேதாந்தமும் சாஸ்திரமும் பேசும் மனிதன் பாபம் என்கிற பதத்தையே மறந்துவிட்டான் போலிருக்கிறது. அகிலாவின் கதியைக் கேட்க எனக்கு வயிறு கொதித்து இதயம் துடித்தது. உன் பொருட்டு உன் கணவனை வித்யாஸமான வார்த்தைகளால் திட்டவில்லையெனினும் திட்டாமலும் இருக்க முடியவில்லை.

ஸரஸா! உன் கணவனுக்குத் தெரியாமல் ஆஸ்பத்திரியில் போய் பார்க்க நானும் என் தாயாரும் கிளம்பிச் சென்றோம். அகிலாவுக்கு நினைவு என்பதே இல்லாதிருந்தது. என் தாயார் கதறிவிட்டாள். "இத்தனை அபாக்யத்தைச் செய்த அப்பாவிப் பெண் செத்துவிட்டாலும் நிம்மதியாகிவிடுமே! அந்த கைவேலைகளைச் செய்து தங்கப் பதக்கம் பரிசுபெற்ற கையை, அதிலும் விரலை உடைத்துவிட்டான் பாவி. இனி விரல் உபயோகப்படமுடியாது" என்று டாக்டர் கூறினாள்.

அவளை நாங்கள் திருட்டுத்தனமாகவே போய் பார்த்து ஆறுதல்கள் கூறிவந்தோம். இம்மாதிரியான ஜன்மங்களுக்கு சாவு ஏன் வருகிறது? பிழைத்துக்கொண்டாள். கன்னத்தில் உன் கணவன் அடித்த அடியில் காது செவிடாகி இருக்க வேண்டியது, அது யார்செய்த பாக்கியத்தினாலோ காது மட்டும் சரியாகக் கேட்கிறது. ஸதா உன்னையும் உன் குழந்தையையும் பற்றியே பிதற்றுகிறாள். நாங்கள் எத்தனை தேறுதல் சொல்லியும் கேட்காமல் கதறுகிறாள். "என் அண்ணனுக்கு உன்மீதுள்ள ஆத்திரத்தினால் உனக்கும் ஏதாவது தீங்கு விளைவிப்பான். நீ என்னைப் பார்க்கவே வராதே. உபகாரம் செய்ததற்கு ப்ரதி அபகாரமாகவே முடியும்" என்று நடுங்குகிறாள்.

ஆனது ஆகட்டும் என்று உன் கணவனிடம் சண்டையிடத் தயாராயிருந்தேன். அதற்குள் கிணறு வெட்டப் பூதம் கிளம்பியதுபோல் உன்னுடைய கணவன் பெரும் பாறையை எங்கள் தலையில் புரட்டிவிட்டான். எங்கள் வீட்டுக்காரனிடம் சென்று எங்களை முதலில் காலிசெய்து விரட்டவேண்டுமென்றும், வீட்டில் சம்சாரிகள் குடியிருப்பதுபோலில்லாமல் 'ப்ராத்தல் விடுதி'யைப்போல் நடத்துவதால் தெருவுக்கே அபாயமாகவும் வெட்கமாயுமிருப்பதால் உடனே காலி செய்யும்படிக்கும் கலகம் செய்திருக்கிறான். அதோடு விடாமல், என்மீது இல்லாத பொல்லாத புகார் எல்லாம் செய்து என் காலேஜ் அதிகாரிக்குக் கடிதம் வேறு எழுதி எனக்கொரு கரும்புள்ளித் தயார் செய்ய முற்பட்டான். ஆனால் என் அதிகாரிக்கு என்னைப்பற்றி நேராகவே நன்றாய் தெரியுமாதலால் அதை நம்பாது

கடிதத்தைக் கிழித்தெறிந்ததோடு அகிலாபாயிக்காக அனுதாபமும் பட்டுக் கண்ணீர் விட்டாள்.

ப்ரஸவித்துப் பலவீனமான நிலைமையிலுள்ள உன்னிடம் இவ்விஷயங்களை எழுதக்கூடாதென்று பேசாதிருந்தும் நீ பல கடிதங்கள் எழுதிவிட்டதால் நான் எழுதும்படி நேர்ந்தது. நீயும் குழந்தையும் சௌக்கியமென்று நம்புகிறேன். என் பிதாவை வேறு ஊருக்கு மாற்றிவிட்டதால் அடுத்தவாரம் எல்லோரும் ஊருக்குப் போகிறார்கள். நான்மட்டும் ஹாஸ்டலிலேயே இருக்கப் போகிறேன்.

மாயாஜாலத்திலும் மந்திரமாக இருக்கிறது; உன் கணவனுக்கு நாங்கள் வருவதும் போவதும் எப்படியோ தெரிந்துபோய்விட்டதாம். ஆஸ்பத்திரியின் ரூலைக்கூட முறித்துக்கொண்டு இரவோடிரவாக அகிலாவை அழைத்துக்கொண்டு போய்விட்டானாம். எங்கு போனான் என்ன வானான் என்பது ஒன்றுமே தெரியவில்லை. நாங்களும் எத்தனையோ ப்ரயத்தனம் செய்து பார்த்தோம். இன்றளவும் ஒருவிதமான விஷயமும் தெரியவில்லை. காட்சிச்சாலையில் உன்னுடைய கைவேலையை வைத்ததுதான் மகத்தானகுற்றமாம். அவருக்குத் தெரியாமல் நீ செய்ததால் உன்னையும் வெறுத்துவிட்டதாகவும் இனி அழைக்கப் போவதே இல்லை என்றும் அடிக்கடி அகிலாவிடம் சொல்கிறானாம்.

ஏதோ ஒரு கதை சொல்வார்கள் பாரு, தான் தின்று வீசி எறிந்த ஒரு பழத்தின் தோலைத் தின்ற பரதேசிக்குக் கடுமையான தண்டனையை அரசன் விதித்தானாம். "தோலைத்தின்றதற்கே எனக்கு இத்தனை தண்டனையானால் பழத்தையே தின்றவனுக்கு என்ன தண்டனையை பகவான் விதிப்பானோ!" என்றானாம். அதுபோல் நீங்கள் ஒருவர் கண்ணிலும் அகப்படாமல் கையினால் செய்த வேலைக்கே இத்தனைக் கடுந் தண்டனையாயின் இத்தகைய தண்டனையை நிரபராதிகளான உங்கள்மீது விதித்துள்ள அந்த முழு முட்டாளுக்கு எத்தகைய தண்டனையைத்தான் விதிப்பானோ தெரியாது. ஸரஸா! எனக்குள்ள ஆத்திரத்தில் அந்த மடையனுக்கு என் கண்முன்பு பகவான் புத்தி வரும்படியாக ஒரு பாடம் கற்பித்தால் போதும் என்றுதான் தோன்றுகிறது. உன் குழந்தை சவுக்யமா! ஏதாவது விஷயம் தெரிந்தால் நான் எழுதுகிறேன். விசனப்பட்டு நீ உடம்பை பாழாக்கிக்கொள்ளாதே. பகவான் நிரபராதிகளைக் கைவிடமாட்டான். உன் குழந்தையைக் காக்கும் பெரிய பொறுப்பு உன் கையில் வந்துவிட்டதால் அந்த பச்சிளம் பாலகனுக்காக நீ உன் உடல் நலத்தைக் கவனிக்கவேண்டும். இந்த கடமையை, தர்மத்தை மறக்காதே. இதைத்தான் உனக்குக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்ஙனம் உன் ப்ரிய,

அமராபாய்"

இதைப் படித்த பிறகுதான் ஸரஸாவுக்கு விஷயம் ஸ்பஷ்டமாக விளங்கியது. அடுத்த நிமிடமே அவளை எங்கேயோ ஆகாசத்தில் தூக்குவதுபோன்ற ஒரு அதிர்ச்சி உண்டாகி தலையைச் சுழற்றியது. நானும் அகிலாவும் தங்கள் பொழுதை நல்ல மார்க்கத்தில் ஆனந்தமாகவும் உபயோகமாகவும் கழிக்கும்பொருட்டு கற்றுக்கொண்ட வேலைகளே தங்களுக்குச் சத்ருவாயும் எமனாயும் அமைந்துவிட்டது என்பதை நினைக்க அவள் உள்ளம் அதை நம்பாமல் விம்மியது.

இந்த அல்ப காரியத்திற்காக தன் கணவன் கொலை செய்வதற் கொப்ப அந்த அழகிய மலர்க் கரத்தை ஒடித்துவிட்டான் என்று படித்ததும் அந்த யுவதியின் மனம் பயத்தால் துடிப்பதைவிட தன் கணவனின் மவுட்டீக குணத்தையும் மூட ஆத்திரத்தையும் எண்ணி தாங்கவியலாத கோபமும் ஆத்திரமும் துக்கமும் அகிலாவின் பரிதாபத்தை எண்ணி பதறலும் ஒன்று கூடி அலைகடல் அலை எனப் பொங்கிக் கொந்தளித்தது.

ஒரு குழந்தை பிறக்க... அதிலும் ஆண்குழந்தை பிறப்பதற்காகச் செய்யும் தவமும், பூஜையும் ப்ரார்த்தனையும் அளவிட்டுச் சொல்லமுடியாது. அப்படிச் செய்தும் சிலருக்குக் குழந்தை பிறப்பதே துர்லபமாக இருக்கிறது. யார் செய்த தவத்தினலோ பிறக்க மாட்டாத குழந்தை பிறந்திருந்தும் அதைக் கண்டு சந்தோஷிக்காமல் இத்தகைய அல்ப விஷயங்களுக்கு மனத்தைத் தளரவிட்டு இப்படியா கொலைசெய்யத் துணிந்தது?— என்று நினைக்கும்போது இக் குழந்தை பிறந்த வேளைதான் இப்படியாகிவிட்டதோ என்கிற ஒரு விசித்திரமான எண்ணம் திடீரென்று உண்டாகிச் சற்று முன்பு வரையிலிருந்த செல்லமும் அருமையும் ஆனந்தமும் எப்படியோ ஒரு விநாடி மறைந்துவிட்டது,

இதற்கு முன்பெல்லாம் குழந்தையின் மலர்ந்த இதழ்போன்ற முகத்தைப் பார்த்துப் பார்த்துப் பூரித்து இன்பவாரிதியில் திளைந்த அவளுக்கு இப்போது சொல்லத் திறமற்ற ஆத்திரமும் அருவருப்பும் உண்டாயின. களங்கமற்ற வானத்தில் துல்லியமாக ப்ரகாசிக்கும் சந்திரனைப் பழிக்கும் முகத்துடன் நித்திரை செய்யும் குழந்தையை உற்று ஒருகணம் பார்த்தாள். "போடா அதிர்ஷ்டஹீனப் பயலே! உனக்காகவே உயிரைவிடவும் தயாராயிருந்த உன் அத்தையை நீ பிறந்தவுடனே கையை ஒடிக்க வைத்துக் குடும்பத்தையே சிதறவடித்துவிட்டாயே சனியனே! உன்னால் நான் எத்தனையோ உயர்வு பெற எண்ணிக் கனவு உலகத்தில் சஞ்சரித்தது முற்றும் பகல் கனவாகவே ஆய்விட்டதே. உன் பாட்டியின் மரணவாக்கைப் பரிபாலிக்காமல் உன் தந்தை கொலை செய்யவும் துணிந்த விபரீதம், நீ பிறந்த வேளையின் கொடுமையாகத்தானிருக்க வேண்டும். இல்லாவிட்டால் ஊரானைப்போல் பிள்ளைக்குழந்தை பிறந்தது என்றால் எத்தனை சந்தோஷமாய் உன் பிதாவும் அத்தையும்வந்து புண்யாவாசனமும் தொட்டிலும் நடத்தி உன்னைச் சீராட்டியிருக்கமாட்டார்களா! நீ என்னுள்ளத்தில் தேனை இனிப்பாய் என்று எண்ணியதற்கு ஆயிரம் தேளாகக் கொட்டி வாட்டுகிறாயே! நீ பிறக்காதிருந்தால் நான் ஒரே நிலையில் இருந்திருப்பேனே!... நீதானே எங்களைப் பிரித்து வேடிக்கை பார்க்கிறாய்?"...

என்று கடுமையான பார்வையுடன் குழந்தையைப் பார்த்து தனக்குள் திட்டினாள். அதே சமயம் குழந்தைக்கு ஹரிமிரட்டல் ஹரிவிளையாட்டு இவைகளினால் உண்டாகும் விசித்திரமான அழுகையும் உடனே உடனே ஆனந்தமயமான சிரிப்பும் உண்டாகியதைப் பார்த்ததும் ஸரஸாவின் ஆத்திரமும் கோபமும் எப்படியோ மறைந்துபோய் அன்று மலர்ந்த இதழுக்கொப்பான அக் குழந்தையின் சிரித்த முகத்தின் வசீகர சக்தி தாயுள்ளத்தின் மூடு

பனித் திரையை விலக்கி, எங்குமில்லாத அணைகடந்த அன்பு வெள்ளம் பொங்கச்செய்து களி வெறியில் அவளை ஆழ்த்தியது. அதை வாரியணைத்துப் பல முத்தமிட்டு உச்சி முகர்ந்து "என் கண்ணே! உலகமே இன்னதென்றறியாத பச்சைக் குழந்தையாகிய உன்மீது நான் கடுஞ் சொற்களைப் பாணம்போல் ப்ரயோகித்துவிட்டேனடா! என் ராஜா! என் தங்கக்கட்டியே! என் பாவத்திற்கு நீ என்ன செய்வாய்?" என்று தன்னையே வெறுத்து அதைத் தழுவிக்கொண்டாள்.

"ஆஹா! அந்த ஆனந்தத்தின் அபாரமான இன்ப சக்தியை யாரால்தான் வர்ணிக்க இயலும்? சொர்க்கப் பதவி என்றும் அமுதக் கடல் என்றும் ஏதேதோ சொல்கிறார்களே! இந்த பேரானந்த விருந்திற்கு நிகர் அவைகள் கூட இருக்குமோ இருக்காதோ? யார் கண்டது? அத்தனை அபூர்வமான ஆனந்தம் அதற்கிருப்பதனாலன்றோ தெய்வப்புலமை திருவள்ளுவர் இந்த நிகரிலாத இன்ப உணர்ச்சியைக் குறித்துப் பாடியிருக்கிறார்" என்று ஸரஸாவின் இதயத்தில் ஏதோ ஒன்று ஒலித்தது. அதே ஆனந்தத்தில் அவளது இதயம் சற்றுநேரம் மெய்மறந்தது என்றால் மிகையாகாது.

## 18

சினேகிதை என்றால் சாமான்ய சினேகமாகச் செய்யவில்லை. அமராவும் அகிலாவும் அத்தனை அன்யோன்யபாவத்துடன் தேனும், பாலும், பூவும் மணமும் போல் என்றால் அது வியப்பில்லை. ஆஸ்பத்திரியில் அகிலாவைக் காணாததும் உடன் பிறக்காமலேயே அந்த பாசத்தை ஜன்மாந்திர பந்தத்தினால் முற்றிலும் பெற்றிருந்த அமராபாயிக்கு உண்மையில் இன்னதென்று விவரிக்க வியலாத விதம் மன அதிர்ச்சியும் ஆச்சரியமும் உண்டாகி வதைக்கின்றன.

எத்தனையோ ப்ரயாசைப்பட்டு விசாரித்தும் ஒரு தகவலும் கிடைக்காததால் அந்த முரடன் அகிலாவை வேண்டுமென்றே கொலை செய்திருப்பானோ என்றுகூடத் தோன்றியது. படிப்பிலும் மனம் நாடவில்லை. ஊணுறக்கம் கொள்ளவில்லை. "இப்படியும் ஒரு ப்ரக்ருதி இருக்குமா?" என்று அவனைச் சபித்தாள்.

அகிலாவின் வீடோ, பூட்டியபடியே இருப்பதால் யாரை விசாரிக்க முடியும்? நாட்களோ உருண்டு கொண்டே பின்னும் இரண்டு மூன்று மாதங்களைக் கடத்தி விட்டன.

ஸாமிநாதன் சம்ஸ்கிருத பாடசாலையில் வேலையை விட்டு விட்டான் என்கிற தகவலை யறிந்து பின்னும் ஆச்சரியத்தினால் அமராபாய் தாக்கப்பட்டாள்.

அமராபாயின் தொடர்பு அடியோடு நீங்குவதற்காகவே ஸாமிநாதன் அன்று அகிலாவை அடித்தவுடனே வெகு தூரத்தில், ஊருக்கு வெளியில் வீடு பார்க்கச் சென்றான். அகிலாவின் கையை முறித்த வேகத்தில் அது இசகு பிசகாய் விட்டதால் அன்றே அவளைக் கண்டு பயந்து ஸாமிநாதனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனான்.

ஆஸ்பத்திரியிலும் அமராபாயும் அவள் தாயும் வந்து உதவி செய்வதை அறிந்து ஒருவருக்கும் தெரியாமல் இரவோடிரவாய் ஆனது ஆகட்டும் என்கிற முரட்டு சுபாவத்துடன் ஒரு மாட்டு வண்டியில் அகிலாவைக் கடத்திக் கொண்டு ஒரு பட்டிக்காட்டிற்கு, முன்பின் தெரியாத இடத்திற்குச் சென்றான்.

நாம் எங்கு வந்தோம், என்ன செய்யப் போகிறோம்: என்பதை யறியாது ஸாமிநாதன் சற்று தயங்கினான். அகிலாவுக்கோ தன் ப்ராணன் போய்விடக்கூடாதா ? ஏன் இன்னும் இப்பாழும் உடலில் இருக்கிறது என்ற ஏக்கமே அதிகரித்து வாட்டி வதைக்கிறது. பாதைதாங்காமல் "ஐயோ! அப்பா!" என்று முனகிக் கண்ணீர் விடுகிறாள்.

ஸாமிநாதனே ஏதோ கஞ்சி தயார் செய்துக் கொடுத்தான். நாட்டுப்புறத்தில் ஒரு வயித்தியனை அழைத்து வந்து அவளுக்கு பச்சிலை மருந்து வைத்துக் கட்டச் செய்தான். இத்தனை பாதைக்கும் மத்தியில் அகிலாவின் நினைவு முற்றும் தன்னருமை மதனி ஸரஸாவின் பேரிலும் அவள் குழந்தை, அமரா ஆகியவர்கள் மீதும் சித்றி அலை பாய்ந்தது.

அந்த ஆபத்தான நிலைமையிலும் தன் அண்ணனிடம் குழந்தையைப் போய்ப் பார்க்கும்படியாயும் மன்னியை அழைத்து வரும்படியாயும் கெஞ்சினாள். அந்த மூர்க்கனிடம் விழலுக் கிறைத்த நீர் போலாகி விட்டது கண்டு துடிதுடித்தாள்.

சுமார் ஒரு மாத காலத்திற்குமேலாகி விட்டது. கை விரல்கள் வெட்டப்படாத குற்றமேயன்றி நீட்டவும் மடக்கவும் அசைக்கவும் ஸ்வதந்தரமின்றி ஒரே நிலையில் நின்று விட்டதால் சாதம் கூடக் கலந்து சாப்பிடுவதற்கு முடியாது போயிற்று. சாதாரணமான வீட்டு வேலைகளை இடது கையினாலேயே செய்யப் பழகிவிட்டாள்.

கடவுளின் க்ருபாஸாகரத்தின் விசித்திரங்களை யாரால்தான் அறியக்கூடும்? புறக்கண்ணில்லாத பிறவிக் குருடனுக்கு ஆச்சரியமான அகக்கண்ணையும், செவிடனுக்கு வெளிச்சத்தையும் சேர்த்து இதயத்திற்குள் அபூர்வ சப்த ஜாலங்களையும், ஊமைக்கு உள்ளுணர்ச்சிகளின் ஆச்சர்யங்களையும் முடவனுக்கு மனோவேகங்களையும் வியக்கத்தக்க விதமாக அளிக்கும் கடவுள் அகிலாவுக்கும் அவளையறியாமலேயே இடதுகைப் பழக்கத்தை எப்படியோ கொடுத்ததானது ஸாமிநாதனுக்கே ஆச்சரியமாயிருந்தது என்றால் அகிலாவுக்குள்ள வியப்பை கூறமுடியுமா ?

ஸரஸாவைப் பற்றியோ, குழந்தையைப்பற்றியோ ஒருவிதமான தகவலும் தெரியவில்லை. அமராபாயைப் பற்றிய தகவலும் இல்லை. காட்டில் வாழும் பறவையைப் போன்று அகிலாவின் வாழ்க்கையும் இருந்தது.

## 19

ஸரஸாவின் ப்ரயத்தனங்கள் முற்றும் வீணாகியதால் அதே வேதனையில் மனது முறிந்து நோயாளிபோலானாள். அவளது தகப்பனாரும் தேடாத இடமில்லை. ஸாமிநாதன் ஸம்ஸ்க்ருத காலேஜை விட்டுவிட்டான் என்பதை அறிந்த தாய்தந்தையர்களும் விசனித்தார்கள்; எனினும் ஓயாது கண்ணீர் விட்டுக் கதறி, கடும் நோயாளியாகி விட்டால் யார் அவஸ்தைப் படுவது என்கிற அனுதாபத்தினால் சற்று கடிந்தும் சொல்வார்கள். பேதைப் பெண் என்னசெய்வாள் பாவம்!

அமராவுக்கு மறுபடியும் கடிதமெழுதியதில் ஸாமிநாதன் அகிலா ஆகியவர்களைப் பற்றிய எத்தகைய தகவலும் தனக்கு ஒன்றுமே தெரியாதென்று தகவல் கிடைத்தது. இந்த எதிர்பாராத குழப்பங்களினால் ஸரஸாவுக்குப் பயித்தியமே பிடித்து விடும்போலாயிற்று. தன் கணவ

னின் நினைவை விட அகிலாவின் நினைவுதான் அவளுக்கு அதிகமாகப் பாதித்தது. "மரணத் தறுவாயில் தன் மாமியாருக்குக் கொடுத்த வாக்கைப் பரிபாலிக்காமல் பாழாக்கிவிட்டோமே! அந்த பெத்த மனத்தின் சாபம் என் குழந்தையை பாதிக்காமலிருக்கவேண்டுமே?" என்கிற பயமே அவளை இரவு பகலாக வாட்டத் தொடங்கியது.

தினம் முக்காலமும் கோயில் ப்ரதக்ஷணம் செய்வதும் ஒருவேளை புசித்து வருவதும் அனுஷ்டிப்பது மாய் ஸரஸா ஓர் சன்யாசினி போலவே காணப்பட்டாள். உலகத்தின் ஆசாபாசங்களையும், மதமாச்சரிய வித்யாஸ ஹீன குணங்களின் துர்மணத்தையுமறியாத குழந்தை மட்டும் சதா மலர்ந்த இதழ்போன்ற அழகிய முகத்தில் விலைமதிப்பற்ற புன்முறுவல் அரும்ப நிச்சலனமான இதயத்துடன் காணப்பட்டது.

அகிலாவின் வாழ்க்கை ஊமையின் வாழ்வுக்கொப்பவே முடிந்தது. அனேக சமயங்களில் தற்கொலை செய்துகொள்ளவே துணிந்தாள். ஆனால் அந்த பயங்கரமான பாபத்திற்கு அஞ்சி வாளாவிருந்தாள். அண்ணனிடம் பேசுவதையேவிட்டு விட்டாள். கேட்டதற்குப் பதில் கூறுவதும் ச்ரமமாக விருந்தது; எனினும் ஸரஸாவையும் குழந்தையையும் அழைத்துவரும்படி மட்டும் பலதரம் முறையிட்டு அலுத்துப் போனதால் அதே மனக் கவலையால் மவுனத்திலும் மவுனம் அனுஷ்டிக்கத் துடங்கினாள். ஆயினும் ஒவ்வொரு சமயம் இந்த மகத்தான மவுனத்தையும் கிழித்துக்கொண்டு அவளையறியாத ஒருவிதமான ஆத்திரமும் உத்வேகமும் பொங்கி எழும். "நியாய அநியாயமற்ற மனிதனுக்கு நாம் ஏன் அடிமைபோல் அடங்கிக் கிடக்கவேண்டும்? நமக்கும் ஒரு சுய மரியாதையும் சுதந்திரமும் இல்லையா! அதன்படி ஏன் நடக்கக்கூடாது?" என்று ஒரு நிமிஷம் நினைப்பாள். அடுத்த நிமிடமே தனது கை ஸ்வாதீனமற்றுத் தனது அடிமைத் தளையின் இரும்புச் சங்கிலியைப் பின்னும் இழுத்துக் கட்டியிருப்பது போன்ற விதியை உண்டாக்கிவிட்டதை எண்ணி மனந் தவித்துச் சோர்ந்துவிடுவாள். ஒரு வீட்டில் போய் வேலை செய்து பிழைக்கவும் ஸ்வாதீனமற்றக் கட்டையாகிவிட்ட துக்கம் பொங்கி வந்து அவளை நிலைகலங்கச் செய்தது. இதே உணர்ச்சியில் மனது வரண்டுபோய் ஒரு கட்டைக்குச் சமானமாகி நடைச் சவம்போல் வாழ்க்கையை நடத்திவந்தாள். புதிய ஊர் புதிய மனிதர்கள் ஆகையால் இவர்களைப்பற்றி யார் என்ன நினைத்துப் பேசுகிறார்கள் என்பதே இவர்களுக்குத் தெரியாமலிருந்தது.

கல்லினும் கொடிய நெஞ்சம் படைத்த ஸாமியின் உள்ளத்தில் என்னதான் ஒலிக்கின்றதோ யார் கண்டது? அத்தனை நாடகமாயும் ரகஸியத்திலும் ரகஸியமாயும் இருந்தது. இப்படியே சில காலம் உருண்டது. ஒருதினம் அகிலா தன் விதியை எண்ணி வேலை செய்துகொண்டிருக்கையில் ஸாமிநாதன் அவசர அவசரமாக ஓடிவந்து ஒருநாளும் இல்லாமல் திருநாளைப் போல் "அகிலா! அகிலா! இங்கு வா...இப்படி வாயேன். உன்னுடைய கஷ்டகாலங்கள் சூரியனைக் கண்ட பனி போல் விலகி, பகவானின் கருணையால் நல்லகாலம் பிறந்துவிட்டது, இப்படி வா"...என்று பெரிய எக்காளம்போட்டு அழைத்தான்.

அகிலாவுக்கு முதலில் ஒன்றுமே புரியவில்லை. தனது மன்னியும்

குழந்தையுந்தான் வந்துவிட்டார்களோ! என்கிற அபாரமான உணர்ச்சியுடன் ஓடிவந்து பார்த்தாள். இவள் நினைத்துவந்த பிம்பங்களுக்குப்பதிலாக ஒரு ஆண்பிள்ளை நிற்பதைக் கண்டு அச்சமும் பயமும் கொண்டு உள்ளே போகப் புறப்பட்டாள்.

ஸாமிநாதன் அவளைத் தடுத்து "போகாதே அகிலா! நில்லு... இந்த மகானுபாவரை யார் என்று எண்ணினுய்? இவர்தான் உன் கணவர்" என்று கூறி முடிக்கு முன், அகிலாவைத் தூக்கி வாரி சமுத்திரத்தில் போட்டுப் புரட்டுவது போன்று தாங்கவியலாத அதிர்ச்சியும் ஆச்சரியமும் உண்டாயின. ஆகாயமும் பூமியும் சுழல்வது போன்ற நிலைமையில் அவள் சுவருடன் சுவராகச் சாய்ந்து நின்ருள். வாய் திறக்க முடியவில்லை; கண்களும் நீரைக் கக்குகின்றன.

இதே சமயம்அந்த மனிதன் கண்ணீர் பெருக.."அகிலா..என்னருமை அகிலா! நான் மகாபாவி...பாவி என்று சாமானியமாகச் சொன்னல் போதாது. படுபாவி, சண்டாளன் என்ருல் தகும். கையில் கிடைத்த மாணிக்கத்தை வெறும் கருங்கல் என்று எண்ணி உதாசீனம் செய்துவிட்டு, உண்மைக் கருங்கல்லை வைரமென எண்ணி ஏமாந்து முட்டிக்கொண்டதன் பலன் என் மண்டையே உடைந்ததுதான். அகிலா! இப்படி உட்காரு. என்னை உனது பரிபூர்ண மனத்துடன் மன்னித்தேன் என்று கூறி எனக்கு அபயமளித்துக் காப்பாற்று"என்று கதறினுன்.

ஸாமிநாதனுக்கும் கண்ணீர் மளமளவென்று வந்துவிட்டது. மாப்பிள்ளையின் கண்களைத் தானே துடைத்துப் பின் "மாப்பிள்ளை! போனதுபோயிற்று. இனிமேல் புலம்பி லாபமென்ன! என்னருமை அகிலாவின் வாழ்க்கை விளக்கு அடியோடு அணைந்தே போய்விட்டது என்றுதான் நான் திட்டம் செய்திருந்தேன். அம்மட்டில் யார்செய்த தவப்பயனே, அணைந்த விளக்கு ஏற்றப்பட்டது. இனியாவது பழய மாதிரி இல்லாமல் உங்கள் சொத்தை நீங்கள் வைத்துக் காப்பாற்றி இருவரும் இன்புற்ருல் போதும். எனது பளுவும் ஒருவாறு குறைந்தது. "அம்மா, அகிலா! உன் விஷயத்தில் நான் எத்தனையோ அபராதம் செய்திருக்கிறேன். எல்லாவற்றையும் மறந்து மன்னித்துவிடு" என்று தன்னையும் அறியாமல் வணங்காமுடி மன்னன் போன்றுள்ள முடுக்கும் கோபமும் மறந்து கூறிவிட்டான்.

அகிலாபாயிக்கு என்னவோ, எந்த வார்த்தையும் காதில் விழவில்லை, அயோமயமான நிலைமையில் தம்பித்து நின்றவள் சுய உணர்வைக்கூட சில விநடிகள் இழந்திருந்தாள். "என் கணவரா! என்னை மணந்த கணவரா! பொம்மைக் கல்யாணத்திற்குச் சமமாக மணந்த மகா புருஷரா! எனக்கும் நல்ல காலம் பிறந்துவிட்டதா?" என்பவை போன்ற எண்ணங்கள் அவளுடைய இருண்டு அந்தகாரமாகிக் கிடக்கும் உள்ளத்தில் மின் வெட்டுக்கள்போல் தோன்றி அவளைப் பல விதத்திலும் குலுக்குகின்றன.

அம் மனிதனை இமை இசைக்காமல் பார்க்கிருள். பல வருடங்களுக்கு முன்பு கனவு கண்டவை போன்று மணவறையில் தானும் தன் கணவனும் வீற்றிருந்த கல்யாண கோலத்தின் ரூபத்தை நினைவு படுத்திப் பார்க்கிருள். ஒன்றுமே



புரியாது குழப்புகிறது. சந்தோஷம், துக்கம், ஏக்கம், அதிர்ச்சி எல்லாம் ஒன்றுகூடி சகிக்க வியலாத வேதனை செய்கின்றன. கணவ னிடம் ஒரு வார்த்தைகூடப் பேச அவளால் முடியவில்லை, ஒரு கும்பிடு மட்டும் எப்படியோ போட்டுவிட்டு தடதடவென்று உள்ளே ஓடினன்.

அவளது குழப்பங்களும் அவளை விடாமல் துரத்திச் சென்றன. "இத் தனை காலமாகக் கண்ணெடுத்தும் பாராதிருந்தவருக்கு இப்போது மட்

டும் நான் எதற்கு? திடீரென்று என் நினைவு எப்படி வந்திருக்கும்? இன்றுள்ள நல்ல புத்தியில் வந்ததுபோல் நாளை பழய புத்தியுடன் ஓடிவிட்டால் அப்போது என் கதி என்னவாவது? இருண்டு கிடக்கும் வாழ்க்கை இருண்டே கிடக்கட்டுமே" என்று ஒன்று கூறுகிறது.

"ஐயோ! இதுவரையில் கரைகாணாத துயரக் கடலில் தவித்தாய். இனி உனக்குக் கரைகாட்ட உன் மீது கருணை கூர்ந்து கடவுள் அனுப்பியுள்ளார். அதை வீணுக்கிக் கொள்ளாதே" என்று பின்னும் ஏதோ ஒன்று உறுமுகிறது. "பேதைப்பெண்ணே! உன் கணவன் அவன்தானு! தெரிகிறதா! ஸரியாகப் பார்த்தாயா!" என்று மற்றொரு பூதம் பயங்காட்டி அவளது சப்த நாடியையும் அடக்குகிறது. "அடி அசடே! உன் கணவனை உனக்குத் தெரியவில்லை? உன் கண்கள் எப்படி இத்தனை மாறுதலையடைந்துவிட்டன! சீச்சி! கைம்மேல் வந்துள்ள அதிர்ஷ்ட தேவதையை காலால் அடித்து விரட்டவா பார்க்கிருய்?" என்று மீண்டும் ஒன்று எச்சரிக்கின்றது.

நாலா பக்கமும் பிடித்து ஆட்டிக் குலுக்கும் உணர்ச்சி வெள்ளத்தினின்றும் மீளமாட்டாது புரண்டுத் தத்தளிக்கும் அகிலாவிருக்குமிடம் ஸாமிநாதன் வந்து "என்னம்மா யோசனை செய்கிருய்? வந்தவருக்கு ஏதாவது ஆகாரம் கொடுக்க வேண்டாமா? ஏன் இப்படி உன் சரீரம் கிடுகிடென்றுஆடுகிறது?" என்ருன்.

அகிலாவின் அத்தனைக் குழப்பத்திலும் ஒரு யோசனை பளிச்சென்று தோன்றியது. அண்ணனின் பாதங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு நமஸ்காரம் செய்து "அண்ணு! சந்தோஷத்துடன் சந்தோஷம் மோதிலைதான் கடவுளுக்கும் த்ருப்தி. வாழ்க்கைக்கும் நல்லது. தாங்கள் எப்படியாவது பெரிய மனது செய்து மன்னியையும் குழந்தையையும் அழைத்து வந்து விடுங்கள். போக முடியவில்லை என்ருல் ஒரு தந்தியாவது கொடுங்கள். மன்னி வந்த பிறகுதான், என் கண்மணி குழந்தையைப் பார்த்த பிறகு தான் எனது சந்தோஷ உணர்ச்சி என் மனத்தில் உறைக்கும். அந்த உபகாரத்தை எப்படியும் செய்து தான் ஆகவேண்டும். மன்னியின் மனம் தவிக்கும்படி நாம் செய்தால் நம் குடும்பமே அதோகதியாகி விடும். அண்ணு! என் வார்த்தையைத் தட்டாமல் நீ செய்யவேண்டும்" என்று கெஞ்சினுள்.

ஸாமிநாதனின் மனத்தில் என்ன தோன்றியதோ அந்த வார்த்தைக்கு மட்டும் பதிலே பேசாமல் மவுனம் சாதித்துப் பின் "காப்பி கொண்டு வா" என்று கூறிச்சென்ருன்.

தனது ஒரு கையினுலேயே காப்பியைத்தயார் செய்து அவர்கள் முன் வைத்துவிட்டு தடதடவென்று உள்ளே ஓடிவந்தாள். "அகிலா! ஓடாதே! நில்லு. என்மீது உனக்கு அளவற்ற ஆத்திரமும் த்வேஷமும் உண்டாகியிருப்பது சகஜமே! மனிதனுக்கு மூளை கலங்குவதும் புத்தி தடுமாறுவதும் இயற்கையும் செயற்கையும் சேர்ந்து செய்யும் சக்தியாகும். அகிலா! நான் செய்த தவறுதலை உணர்ந்து மன்னிப்புக் கோரிய பிறகுகூட தண்டனை செய்யலாமா?" என்று கெஞ்சிக் கேட்கும்போது அவன் கண்களில் மளமளவென்று நீர் வழிந்தது.

வெட்கத்தினுலோ துக்கத்தினுலோ கோபத்தினுலோ மற்ற எதனுலோ அகிலாவுக்கு அங்கு நிற்க முடியாது மனது தாமரையிலை நீர்த்

துளிபோல் தத்தளித்ததால் த்ருசக்கு ஸவர்க்கம்போல் துள்ளினுள். காரணத்தையறிய முடியாமல் அவள் இதயம் கலங்கித்தவித்தது.

## 20

வெறிபிடித்து விட்டதென்றே எல்லோரும் எண்ணி ஸரஸாவிடம் குழந்தையைக் கொடுக்கவும் பயப்படுவதோடு அவளிடம் வெகு ஜாக்ரதையாகவே நடக்கத்தொடங்கினர்கள். ஸரஸாவைப் பார்க்கும் அன்னியர்களும் அவளுக்கு ஏதோ பலமான வ்யாதியோ, பயித்தியமோ என்று எண்ணினர்கள். ஆனல் எத்தனைதான் தாயார் வீட்டில் செல்லமும் செல்வாக்கும் இருப்பினும் கணவனுடன் கூடி இல்வாழ்க்கை வாழும் வாழ்விற்கு ஒப்பாகுமா! கணவன் வீடு கரடி புலிகள் நிறைந்த காடாயினும் அதுவே உத்தம மனைவிக்குச் சொர்க்க போகத்திற்கு ஒப்பானதன்றே! அகிலாவின் வாழ்க்கையின் விபரீதத்தை நேரில் பார்த்து இதய பாதாளத்தில் அவ் வாழ்க்கையின் பயங்கரம் பதிந்துவிட்டதால் அதை நினைக்கும்போதே அவளைச் சித்திரவதை செய்துவாட்டும் வேகத்தில் அவள் நோயாளியைப் போன்றும், பைத்தியம் பிடித்தவள் போன்றும், பைசாசம் பிடித்தவள்போன்றும் தோன்றினளேயன்றி உண்மையில் அவளுக்குப் பிசாசுமில்லை. பூதமும் இல்லை.

தன் கணவனைப்பற்றி ஒருவிதமான தகவலும் தெரியாததால் எப்படியாவது அதைக் கண்டுபிடித்து அவனிடம் போய்ச் சேராவிடில் தன் ப்ராணன் போய்விடும் என்பது நிச்சயமாகத் தெரிந்துவிட்டதால்பொறுமையை முற்றும் இழந்தாள். தனது தமயனைத் தொணப்பித் தொணப்பி துணைக்கு அழைத்துக்கொண்டு நேரே அமராபாய் படிக்கும் காலேஜ் ஹாஸ்டலுக்கு குழந்தையுடன் வந்ததும், அவள் அறிந்த விஷயம் அவளையே திடுக்குறச் செய்தது.

அதாவது—அமராபாயின் பிதாவை மாற்றினதும், அவள் மட்டும் ஹாஸ்டலில் படித்துக்கொண்டிருந்ததாயும், இன்ன காரணம் என்று தெரியாமலேயே ஏதோ நோயாளி போலாகி அதேநிலைமையில் இருமல் நோய்போல் கண்டுவிட்டதால் அவள் பிதா வந்து அழைத்துக் கொண்டு போய்விட்டதாயும் பிறகு அதைப் பற்றிய தகவலே தெரியாதென்றும் அறிந்தாள்.

தனது கஷ்டத்திற்கு ஏதாவதொரு விமோசனம் கிடைக்குமோ என்று எதிர்பார்த்ததற்கு அமராபாயிக்கே ஆபத்தான நிலைமை உண்டாகிவிட்டதைக் கேட்டுப் பின்னும் மனது துடித்தது. ஸரஸாவின் அண்ணனே இதற்குமேல் எங்கும் போய்த் தேட முடியாதென்று இழுத்துக்கொண்டு வந்துவிட்டான்.

பெண் ஜென்மம்; அதிலும் அடிமைபோன்று அடங்கிக் கிடக்கும் பரிதாபஜன்மத்திற்கு அதற்குமேல் சொல்வதற்கு உரிமை ஏது? தைரியந்தான் ஏது? ஸரஸாவின் மனத்தில் தான் அகிலாபாயை விட மோசமான நிலைமையிலிருப்பதாகவே தோன்றி உறுத்தியது· அவராவது ஒண்டிக்கட்டை. தனக்கு ஒருகுஸர்க்குட்டிஒன்று கூட இருப்பதால் தனது வாழ்க்கையின் சீர்கேடு எத்தனை தூரம் போய் நிற்கும் என்று தெரியாது உருகினள்.

குழந்தை சிரித்து விளையாடுவதைப் பார்க்கப் பார்க்க ஸரஸா வயிறு கொதிக்கின்றதேயன்றி சந்தோஷமோ, ஆனந்தமோ உண்டாகவில்லை. ஸரஸாவின் அண்ணன் மனைவியும் ப்ரஸவத்திற்குத் தாய் வீடு போயிருந்தாள். குழந்தையை

யும் தாயையும் வெகு உத்ஸாகத்துடன் தடபுடலாய் கொண்டு விட்டார்கள்.

அக்குழந்தையை எல்லோரும் சீராட்டுவதையும் தன் மன்னிக்கு உண்டாகிய மரியாதையையும் கணவன் அவளை என்றுமில்லாத பேரானந்தத்துடன் வரவேற்பதையும் பேசி மகிழ்வதையும் காணக் காண "நானும் புக்ககம் சென்றால் இதேநிலைமையில் தானிருப்பேன்? எந்த பாவத்தின் சாபமோ இப்படியாகி விட்டதே... ஆமாம். என் மாமியாரின் சாபந்தான் இப்படி இருக்க வேண்டும். பாவம்! அவரது மரணத் தறுவாயில் வாக்குக் கொடுத்தபடி அவளை நடத்தாது அவள் கையை உடைத்து உயிருக்கே ஹானியைத் தேடிவிட்டதால் இப்படி என் விதியமைந்திருக்குமோ என்று தான் இரவு பகல் எனக்குத் தோன்றுகிறது. என் தாயே! உங்களை நான் மாமியாராக நினைக்காமல் தெய்வமாக எண்ணி முக்காலும் வணங்குகிறேன். நீ நல்ல பெரிய மனது செய்து உன் மகனுக்கு நல்ல புத்தியைக் கொடுத்து என்னை அழைத்துப் போகும்படிச் செய்யமாட்டாயா! உன் பேரன் உன் வீட்டில் வளராது அன்னியர் வீட்டில் அடிமையைப்போலிருப்பது நியாயமா? இது உனக்குப் பொறுக்குமா! இப்படியே என்னை சோதித்தால் நான் இனி தாங்கமாட்டேன்! உன் பேரனைப் பரதேசியாய்த் தவிக்க விட்டு நான் ஆறுக்கோ குளத்திற்கோ தான் இரையாகப்போகிறேன்.

சம்பந்தி வீட்டுக்காரர்கள் ஆளுக்கொரு பேச்சாக குசமச என்று பேசுவதைக் கேட்டு என்னிதயம் ஆயிரம் சுக்கலாக வெடித்து விடும் போலிருக்கிறது. ஐயோ! என் கணவர் எப்படியாவது என்னை அழைத்துப் போகக்கூடும் என்கிற நப்பாசை இருக்கும் எனக்கே இதயம் இத்தகைய வேதனையை அடைந்துத் துடிக்கிறதே! ஐயோ! பாவம்! என்னம்மணி அகிலாபாயின் உள்ளம் எப்படித்தான் துடிக்கும்? அடாடா! வாழாவெட்டி என்ற பெயரைத் தாங்கியபிறகுகூட உலகில் உயிருடன் இருக்கலாமா! கூடாது...கூடாது...கட்டாயம் கூடாது...தற்கொலைபாவது புரிந்து கொண்டு சாகவேண்டும். அன்றி பிச்சை எடுத்தோ, தன் சரீரத்தினால் உழைத்தோ பாடுபட்டுச் சம்பாதித்துதான் வயிறு வளர்க்கவேண்டும். என்னதானிருப்பினும் பெற்றவர்களுக்கும் ஒரு சமயம் இல்லாவிடின் ஒரு சமயம் பெருஞ் சுமையாகத்தான் தோன்றும். இது உலக இயற்கைதானே!"

என்று தன்னினைவு மறந்து விசனித்துக் கொண்டிருக்கையில் அவளுடைய தாயார் அங்குவந்து "என்ன உட்கார்ந்தால் வேண்டியிருக்கிறது? வீட்டில் நிறைய சம்மந்திகள் வந்திருக்கையில் முகத்தைத் தூக்கிக்கொண்டு இதென்ன அழுகை? எழுந்துவந்து டிப்பன் காப்பி தயார் செய்து வை. நான் சம்மந்தியம்மாளுடன் வெளியே போய்வருகிறேன்." என்று சற்று கடுமையாகவே கூறினாள்.

பெற்ற தாயாருக்கு தன் மக்களை அணைப்பதற்கும் அதட்டுவதற்கும் ப்ரத்யேகமான ஸ்வதந்திரம் இருந்த போதிலும் சிலசமயம் சிலரிடம் அது அதீதமாகப் பட்டுவிடுகிறது. ஸரஸாவுக்கு இந்த நிமிஷம் வரையில் இனிமையாயும் வித்யாஸமில்லாமலும் தோன்றிவந்த அதேதாயாரின் இந்தவார்த்தை திடீரென்று என்றுமில்லாத வித்யாஸத்தையும் ஒருவிதமானஉணர்ச்சியையும் கொடுத்தது.

183015



# அமுதமொழி

**வை.மு.கோ. 65—வது நாவல்**

**விரைவில் வெளிவரும்**

*சுமார் 200 பக்கங்கள். 20 அழகிய படங்கள்*

| | |
|---|---|
| உயரிய கிளேஸ் பதிப்பு— | 2—8—0 |
| அன்பிளீச்ட் மலிவுப்பதிப்பு— | 2—0—0 |
| பாதாமி (மஞ்சள்) ,, ,,— | 2—0—0 |

**முன்பணம் அனுப்பி ரிஸர்வ் செய்துகொள்ள வேண்டும். வி. பி. மூலம் அனுப்ப முடியாது. தபாற் சிலவு இனம். உடனே முந்துங்கள்.**

*குறிப்பு:—பணம் அனுப்பும்போது எந்த பதிப்பு வேண்டும் என்பதைத் தெளிவாகத் தெரிவிக்கவும். விலாசத்தை, முக்கியமாக தபாலாபீஸ் பெயரைத் தெளிவாக எழுதவும்.*

---

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, STATION ROAD, SINGAPERUMALKOIL

ஜகன்மோகினி
Jagan Mohini – Regd. No. M. 2210.

# 22 வது ஆண்டு மலர்

★

"ஒப்பிலாத வெளியீடு, தமிழ் உலகத்திற்கோர் புதுமை" என்று சென்ற ஆண்டு மலரைக் கொண்டாடிய மோகினி அன்பர்கள் வெகு ஆர்வத்துடன் எதிர்பார்க்கும் நற்செய்தியை மகிழ்வுடன் வெளியிடுகிறோம். 22-வது ஆண்டுமலர் வெளியிட சர்க்கார் அனுமதித்துவிட்டனர். முழு விவரங்கள் உள்ளே பார்க்கவும்.



## இணையற்ற தமிழ் அமுதம்

★

உடனே பதிவு செய்துகொள்ளவும்.